

# சலங்கை ஒலி





வ/வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி

வவுனியா





Shandha
Tex
People Attractive Textile Land
No.108-A, Bazaar Street,
Vavuniya.
T.P: 024 22879
நிருத்திய நிகேதன
நுண்கலைக்
கல்லூரியை
வாழ்த்துகின்றோம்.

# சலங்கை ஒலி

## வ/வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி
## V/Vavuniya Niruththiya Nikethana College of Fine Arts
## ව/නිරුත්‍ය නිකේතන සෞන්දර්ය විද්‍යාලය

பதிவு இல: வகிமா/கஅ/பண்/வவு/03/2005

16வது ஆண்டு விழாவை முன்னிட்டு

வெளியிடப்படும் சிறப்புமலர்

கல்லூரிச் சஞ்சிகை

2010

மலராசிரியர்

திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்

B.FA, M.FA (India) Dip in Edu.

## அதிபர்



திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்

B.FA, M.FA, (India), Dip in Edu



# விழாக்குழு உறுப்பினர்கள்



தலைவர்: தமிழ் மணி அகளங்கன், உப தலைவர்: திருமதி.சா.விவேகானந்தன், செயலாளர்: திரு.த.தர்மகடாட்சம், உப செயலாளர் : திரு.சுந்தர்ராஜன்
பொருளாளர்: ஏரம்பநாதன், நிர்வாக உறுப்பினர்கள்: திருமதி.வன்னிய சிங்கம், திரு.பாலகுமாரன், திருமதி.காமதேனு, திரு.ஜெகதீஸ்வரன்,
திரு. தினேஸ் லுமிந்த, மலராசிரியர்: திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்

# நிர்வாகக்குழு உறுப்பினர்கள்



தலைவர்: திருமதி.சூரியயாழினி வீரசிங்கம், உப தலைவர்: திரு.த.தர்மகடாட்சம், செயலாளர்: திருமதி.ஜானகி தேவதாஸ்பொருளாளர்: திருமதி.சிவகுலசிங்கம்,
கணக்காளர்: திரு.பாலகுமார் நிர்வாக உறுப்பினர்கள்: திரு.S.T.மகேந்திரராஜா, திருமதி.S.விவேகானந்தன், திரு.கா.ஜெயராஜ்,
திரு. S.தனபாலசிங்கம்,திரு.சு.விஜயதாஸ், திருமதி.சந்திரகுமார், திருமதி.ரவீந்திரராஜா, போசகர்: தமிழ்மணி அகளங்கன்

உ

# நுழைவாயிலில்

எமது நுண்கலைக் கல்லூரியின் 16வது ஆண்டு விழாவை முன்னிட்டு சலங்கை ஒலி எனும் இம் மலரைத் தயாரிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

சலங்கை ஒலி என்பது எமது கல்லூரி மாணவரது பாதங்களிலிருந்து ஒலிக்கின்ற நர்த்தன ஒலியாக இந்த உலகம் முழுதும் ஒலிக்கப்பட வேண்டும்

எமது கல்லூரி மாணவர்களின் கலைத் திறமை அவைக்காற்றுகை நிகழ்வுகள் மற்றும் கல்லூரி பற்றிய தகவல்களையும், ஆக்கத்திறன்களையும் வெளியுலகத்திற்கு எடுத்துக் கூற இந்த மலர் மிகவும் முக்கிய பங்கினை ஆற்றுமென திடமாக நம்புகின்றோம்.

இம் மலரிதழ்களுக்கு வாசனையூட்டிய எமது மாணவர்கள் பெற்றோர்கள், விழாக்குழு உறுப்பினர்கள், வாழ்த்துரை ஆசியுரை தந்த பெரியோர்கள் யாவருக்கும் மலர்க்குழு சார்பாக என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம் மலரைத் தயாரிப்பதில் எம்மை உற்சாகப் படுத்தி ஆலோசனை வழங்கி சகல ஒத்துழைப்புகளையும் வழங்கியவர்களுக்கும் நிதி யுதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இம் மலரை அழகாக அச்சிட்டுத் தந்த வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மலராசிரியர்**



# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானமளந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

**- மகாகவி சுப்பிரமணிய பாரதியார் -**

# வவுனியா
# நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரிக் கீதம்

நிருத்திய நிகேதன
நுண்கலைக் கல்லூரி
விருத்தி பெற்று வாழ்கவே
வீறு கொண்டு வாழ்கவே

பாட்டி சைத்துக் குயில்கள் பாடும்
பாம்பெ ழுந்து நடனம் ஆடும்
காட்டு முல்லை சில் வண்டின்
கானங் கேட்டுத் தேன் பொழியும்

போட்டி யிட்டு மயில்கள் ஆடும்
புகழ் நிறைந்த வன்னி மண்ணில்
நாட்டி யக் கலை பயிற்றும்
நல்ல தொரு நிறு வனம்

(நிருத்திய ........)

பரதம் வீணை பாட்டுப் புல்லாங்
குழல் மிருதங்கம் வயலின் யாவும்
மரபு நெறி விளங்க நன்கு
பயிற்று விக்கும் நிறு வனம்

(நிருத்திய ........)

வவுனி யாவின் சொத் தென
வளரும் நிருத்திய நிகே தனம்
அவனி போற்ற வாழ்கவே
அருந்தொண் டாற்றி வாழ்கவே

**- கவிஞர் அகளங்கன் -**

## பொருளடக்கம்


நுழைவாயிலில் 07

தமிழ்மொழி வாழ்த்து 08

கல்லூரிக் கீதம் 09

ஆசிச்செய்திகள் 11-14

வாழ்த்துச்செய்திகள் 15-16

இயல் 1

வவுனியாவும் பரதநாட்டிய வளர்ச்சியும் 17-20

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் வரலாறு 21-25

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் யாப்பு 26-29

நிருத்திய நிகேதனமும் கலைக் காவிரியும் 30

எமது கல்லூரி இதுவரை நடாத்திய கலை நிகழ்வுகள் பற்றிய விபரம் 31-36

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் சாதனைகள் 37-38

வட இலங்கை சங்கீத சபையால் பரத கலாவித்தகர் பட்டம்,
ஆசிரியர் தராத சித்தி பெற்ற நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் விபரம் 39

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியில் கற்று ஆசிரியர்களாக
வெளியேறிய மாணவர்கள் 40

பரத நாட்டிய அரங்கேற்றங்கள் 41-47

இயல் 2

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் ஆசிரியர்கள் பற்றிய விபரம் 48-56

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் நீண்டகாலமாக நாட்டிய கலையை பயின்று தற்போது கல்லூரியால் கௌரவிக்கப்படும் சாதனை புரிந்த மாணவர்கள் விபரம் 57-58

10.10.2010 நடைபெறும் எமது கலை விழாவில் எமது கலை நிறுவனத்திற்கும் வவுனியா மண்ணிற்கும் நீண்ட சேவையாற்றி கௌரவிக்கப்படும் எமது கலைஞர்கள் 59

ஆங்கில மொழிபெயர்ப்பு 60-73

சிங்கள மொழிபெயர்ப்பு 74-79

இயல் 3

நாட்டியக் கட்டுரைகள் 80-91

பத்திரிகைச் செய்திகள் 92-97



வவுனியா அந்தணர் ஒன்றிய போஷகரும், வவுனியா அருள்மிகு கந்தசாமி கோவில் ஆலய குருவுமாகிய

**சிவஸ்ரீ. இ. பாலசுப்பிரமணியம் குருக்கள்**

அவர்களின்

## ஆசிச் செய்தி

தாயார் பிதாவைக்காட்டுவார். பிதா குருவைக் காட்டுவார். குரு ஆசிரியர் தெய்வத்தைக் காட்டுவார் என்பது சான்றோர் வாக்கு. மேற்காட்டிய நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரியின் ஆசிரியர்கள் (குருவாகும்) மாணவ மாணவிகளுக்குக் காட்டிய தெய்வங்கள்தான் சங்கீதம், பரதம், மிருதங்கம், நாட்டியக்கலை நாடகங்கள் யாவும் எனலாம். ஆயிரக்கணக்கான வருடங்கள் ஏழு யுகங்கள் என்றும் கூறலாம். அதற்கு முன்பு தோன்றியதே இயல் இசை நாடகம். இப்படி சிறப்பானதும் போற்றத்தக்கதுமான நிகழ்வுகளை வவுனியாவில் மட்டுமல்லாமல் நாட்டின் பல பாகங்களிலும் நடாத்தி எல்லா இடங்களிலும் எல்லா நிகழ்வுகளிலும் சாதனை மூலமாகவும் மக்கள் கேட்க, பார்க்க, ரசிக்க கூடியதாக ஆலய விழாக்கள் மகோற்சவ விழாக்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளிலும் இவர்களது நாட்டிய நிகழ்வுகள் இடம் பெற்றன என்பது கண்கூடாகும். இவர்களது செயற்பாடுகள் முன்னேற்றங்கள் யாவும் இந்த சலங்கை ஒலி புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. எனவே முக்கியமாக தேவாரம், திருப்புகழ், கோலாட்டம் இன்னும் அநேக முக்கியமான நாட்டியங்கள் நாடகமாகவும் மக்கள் என்றும் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் நடக்கும், மக்கள் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் நிகழ்ச்சிகளை பார்த்து விட்டு வெகு சிறப்பாக செய்துள்ளார்கள் போற்றக்கூடியதாக உள்ளது என்றும் கதைத்துள்ளார்கள். இவை யாவும் கல்லூரிக்கு மேன்மை ஊட்டக்கூடியதாகவும் ஆசி கூறுவதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை

இவர்களது பணி மென்மேலும் தொடரவும் உலகெல்லாம் புகழ்பரவ வேண்டுமென்றும் எனது சார்பாகவும் வவுனியா வாழ் அந்தணப் பெருமக்கள் சார்பாகவும் எமது வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி ஆலய நிர்வாக சபையினர் சார்பாகவும் ஆசி கூறி வாழ்த்துவதில் மனமகிழ்ச்சியடைகிறேன்.

என்றென்றும் மேன்மையடையவும் சிறப்பாக நாடக நடன சங்கீத மன்றம் செயல் படவும் அன்புடன் ஆசி கூறுவதில் பெருமையடைகிறேன்.

வவுனியா அருள்மிகு
ஸ்ரீ கந்தசாமி கோவில்
வவுனியா.

அன்புடன்
**சிவஸ்ரீ இ. பாலசுப்பிரமணியக் குருக்கள**
(ஆலய குருக்கள்)





## திரு. Rev.Fr.Emailianuspillai அவர்களது

## ஆசிச் செய்தி

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் 16வது கலைவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சலங்கை ஒலி சஞ்சிகைக்கு, புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை ஆகிய நான் இதன் வளர்ச்சியை முன்னிட்டு பாராட்டுவதில் பெருமிதம் கொள்கின்றேன். இந் நுண்கலைக் கல்லூரி கடந்த பத்து(10) வருடங்களுக்கு மேல் வவுனியா மக்களுக்கு பாரிய சேவையை ஆற்றி வருவதையிட்டு பேருவகை கொள்கின்றேன். வவுனியா மாவட்டத்தில் நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி, இந்தியாவில் திருச்சிராப்பள்ளி, கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரியோடு இணைந்து மாணவர்களுக்கு நாட்டிய டிப்ளோமா கற்கை நெறிகளை நடாத்துவது எமது மண்ணின் மாணவர்கள் கலையில் வேகமாக முன்னேறுவதற்கு ஓர் படிக்கல்லாக அமைந்துள்ளது. மேலும் யுத்தத்தால் சீர் குலைந்துள்ள எமது தமிழ் சமூகத்திற்கு இந்த கல்லூரி ஆற்றி வரும் சேவையை எண்ணிப் பெருமிதம் கொள்வதோடு இக் கலைக்கூடம் பல ஆண்டுகள் நற்பணியாற்ற இதய பூர்வமாக இனிதே ஆசித்து, வாழ்த்துகின்றேன்.

**Rev. Fr.Emilianuspillai**





## ගෞරව ශාස්ත්‍රවේදී මුවඇටගම ආනන්ද හිමිපාණන්ගේ පණිවුඩය.......!

වවුනියාව නිරුත්‍ය නිකේතන සෞන්දර්ය විද්‍යාලය 1994 ආරම්භ වී 2010 වන විට ජාත්‍යංතර මට්ටම දක්වා ප්‍රචලිත කිරීමේ හා නගා සිටුවීම වෙනුවෙන් එහි ආරම්භක හා වත්මන් විදුහල්පතිනිය වන වී. සූරියයාලනි මහත්මියට පළමුව ගෞරව කරන්නෙමි.

කලාව ඉදිරියේ ජාති කුල මල ආගම් භේද නැත. කලාව කලා කරුවන් සතුය. කලා නිර්මාණ ජනතාව සතුවෙයි. පසුගිය භීෂණ සමයේ විවිධ දුෂ්කරතාවලට මුහුණ දෙමින් එම කටුක අත්දැකීම් මගින් නොසැළී ගමන් ආරම්භ කළ නිරුත්‍ය නිකේතන මැණියන්ගේ දූ දරු පරපුර ඉතා විශාල වීම අගය කරමි.

මෙම සෞන්දර්ය විද්‍යාලය තව දුරටත් පෞද්ගලික ආයතනයක් වීම රටට කෙරෙන මහත් මදිකමක් සේ මට දැනේ. මෙම ආයතනය රජයේ උපකාරක පාසල් ගනයට ඇතුලත් කොට රජයේ වැටුප් ලබන ආචාර්ය මන්ඩලයකින් සමන්විත, වාර්ෂිකව ශිෂ්‍ය ප්‍රගතියට ගවේෂණය කරන විධිමත් පාසලක් බවට පත්කල යුතු බව මෙහිලා සඳහන් කළ යුතුම වේ. මෙම විද්‍යාලයට රජයේ අනුග්‍රහය ලබා දී ලංකාවේ සුප්‍රසිද්ධ සංස්කෘතික කලායතනයක් බවට අනිවාර්යෙන්ම පත්කල යුතුය.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික ජන රජයේ සංස්කෘතික අමාත්‍යාංශයේ අවධාරණයට යොමු වී මෙහි ප්‍රගතියට මග පෑදිය යුතු අවධිය එළඹ ඇති බව පවසමි. මෙම විද්‍යාලයේ විදුහල්පතිනිය වන වී. සූරියයාලනි මහත්මියගේ පූර්ණ කැපවීමද මෙහිලා අගය කරන අතර මෙම සෞන්දර්ය ආයතනය රජයේ විශේෂ අවධානයට යොමු වේවායි ප්‍රාර්ථනය කරමි. 16 වන කලා උලලෙට මාගේ ආශිර්වාදය පුද කරමි.

ගෞරව ශාස්ත්‍රවේදී මුවඇටගම ආනන්ද හිමි.
ශ්‍රී දළදා විහාරය, මඩුකන්ද, වවුනියාව.





கௌரவ ஆளுநர்
**மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி**
அவர்களது

## ஆசிச் செய்தி

வவுனியா மாவட்டத்தில் நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி பெருவிருட்சமென தலைநிமிர்ந்து தன்குடையின் கீழ் 500 கலைஞர்களுக்கு நிழல் கொடுத்தும் நிற்கிறது. 1994 இல் 5 குழந்தைகளுக்கு கலை பயிற்றுவிப்பதற்கு என ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியின் தொடக்க கால நினைவு ஒவ்வொருவரது நெஞ்சத்தையும் விட்டு அகலாதது. அதன் இயக்கம் வேகமானது. இயங்கிச் செல்லும் மக்களது வாழ்வை கலை உணர்வுடனும் இயங்கவும் வைக்கிறது. புறநானூறு கூறுவது போல் உரையும் பாட்டும் பெறும் மாட்சிமை இத்தகைய கலைமனறங்களை உருவாக்கி செயற்படும் ஒருசிலருக்கேயாகும். 16 வயதுப் பருவமங்கையாக 16 வருடங்களைத் தாண்டி நிற்கும் இக்கல்லூரி மிருதங்க ஆர்வலர்களுக்கும் வாய்ப்பாட்டு இசைப்பிரியர்களுக்கும் நடனக்கலைஞர்களுக்குமெல்லாம் பயிற்சிக் களமாக இடம்கொடுத்து தமிழர்களின் பாரம்பரிய கலைகளின் இருப்பிடமாக விளங்குகிறது. ஒரு மனிதனுக்கு கல்வி அறிவு மட்டுமன்றி கலையறிவும் வேண்டும். அப்பொழுது தான் மனவெழுச்சி அற்ற சமநிலை ஆளுமை உள்ளவர்களை உருவாக்க முடியுமென்ற கோதாவில் இக்கல்லூரி செயற்பட்டு வருகிறது. இதனுடைய 16 வயது காலத்திலே வெளியாகும் சலங்கை ஒலி எனும் சஞ்சிகைக்கு மனமார்ந்த ஆசியைக் கூறுவதோடு மேலும் இம்மாவட்டத்தில் தன்கலைப்பணியை பல்லாண்டு காலம் ஆற்ற வேண்டுமென வேண்டி நிற்கின்றேன்.

**மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி,**
கௌரவ ஆளுநர்,
வடமாகாணம்





வவுனியா அரச அதிபர்

**திருமதி.P.S.M. சாள்ஸ் அவர்களது**

## வாழ்த்து ச் செய்தி

மனித தத்துவத்தை வளப்படுத்தும் முதற்படியான உடல் ஆரோக்கியம் மிக எளிதாக பரதக் கலையினூடாகப் பெறப்படுகின்றது. பரதக் கலை ஒரு வாழ்வியல் பயிற்சியென்றால் மிகையாகாது. நாட்டியமானது அதற்கென்று வகுக்கப்பட்ட ஒழுங்குமுறையில் ஆற்றுகைப்படுத்தப்படும் போது அதனைப் பார்ப்போருக்கும் பயில்வோருக்கும் கிடைக்கின்ற ஒன்றிணைந்த சந்தோசம் மன அமைதி ஆகும். இதுவே மனித தத்துவத்தை வளப்படுத்தும் பரதக் கலையின் ஆத்மார்த்த சத்தியாகும். இவ்வாறான நடனக்கலையை வவுனியா மண்ணில் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி வளர்த்து வருவது சிறப்பம்சமாகும். இக்கல்லூரி மாணவர்கள் வவுனியா மட்டுமல்லாது இலங்கையின் பல பாகங்களிலும் நாட்டிய நிகழ்வுகளை நடாத்தி வருகின்றமை சிறப்பம்சமாகும் . இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம், சுவர்ணவாஹினி கூட்டுத்தாபனம், சக்தி தொலைக்காட்சி, இலங்கை சுயாதீன தொலைக்காட்சி போன்றவற்றில் நாட்டிய நிகழ்வுகளை நிகழ்த்தியமை, இலங்கையின் 61 வது சுதந்திர தின விழாப் பேரணியில் பங்குபற்றியமை, வடக்கின் வசந்தம் கலை நிகழ்வில் பங்குபற்றியமை, மகியங்கனையில் ஆதிவாசிகளுடன் இணைந்து நாட்டிய நிகழ்வுகள் நடாத்தியமை நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்.

இக்கல்லூரி அதிபர் திருமதி.சூரியயாழினி வீரசிங்கம் அவர்கள் நாட்டிய எழில், நிருத்தியவாணி, நாட்டிய கலாரத்தினா, பரதகலா வித்தகர் என்னும் பல பட்டங்கள் பெற்று தற்போது இந்திய திருச்சிராப்பள்ளி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் இணைந்து நடனக் கலையில் முதுமாணிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார். சித்தியும் பெற்றுள்ளார். அதிபரது சிறந்த நெறியாள்கையுடன் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி 500 ற்கு மேற்பட்ட மாணவர்களை தன்னகத்தே கொண்டு சங்கீதம், மிருதங்கம், பரதம், ஆகிய கலைகளை திருமதி வதனி ஸ்ரீதரன், திரு.கந்தையா கனகேஸ்வரன், ஆகிய ஆசிரியர்களுடன் வவுனியாவில் ஒரு கலைப் பூங்காவாக இயக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி 16வது வருடத்தில் காலடி பதிக்கும் இவ்வேளை இவ்விழா சிறப்புற நடைபெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இக் கல்லூரி நாட்டிய உலகிற்கு மேலும் பலசேவைகள் செய்யவேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.



கச்சேரி, வவுனியா
14.09.2010

**திருமதி** P.S,M.**சாள்ஸ**
அரச அதிபர்
வவுனியா



வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் போசகரும்
விழாக்குழுத் தலைவருமான தமிழியல் வித்தகர்

**தமிழ்மணி அகளங்கன் அவர்களின்**

## வாழ்த்துரை

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி இவ்வாண்டில் நடாத்துகின்ற நாட்டியப் பெருவிழாவினைத் தலைமை தாங்கி நடாத்துகின்ற வாய்ப்பு பொதுச்சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன்.

ஆண்டுதோறும் இக்கல்லூரி நடாத்திய விழாக்களை விட இவ்வாண்டு நடாத்துகின்ற விழா பலமடங்கு சிறந்ததாக இருக்கும் என்றே நம்புகின்றேன். மூன்று நாட்கள் விழா. மலர் வெளியீடு, கௌரவம் எனப் பலவகையிலும் இவ்விழா சிறப்புறுகின்றது.

கலையினூடான மானுடப் பண்பின் விருத்திக்கு இம்மன்றம் பெரும் பங்காற்றி வருவதை யாரும் மறந்துவிட முடியாது. இவ்வாண்டில் வெளியிடப்படுகின்ற மலர் பல சிறந்த ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது. கலைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் பயன்படத்தக்க பல அரிய விடயங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

வவுனியாவில் நிருத்திய நிகேதன நுண் கலைக்கல்லூரி என்ற பெயரில் ஒரு கலையகத்தை உருவாக்கி இந்த மண்ணில் கலைச் சேவைக்கு வித்திட்ட சூரியயாழினி வீரசிங்கம் அவர்கள் என்றும் என் பாராட்டுக்குரியவர்

இந்த ஆண்டுக்கான நாட்டியப் பெருவிழா சிறப்புறவும் இவ்விழாவின் நினைவுமலர் புகழ் பரப்பவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழத்துகின்றேன்.

*தில்லைக் கூத்தனின்*
*திருத்தாள் போற்றி*

**அகளங்கன்**

# வவுனியாவும் பரதநாட்டிய வளர்ச்சியும்

தமிழ்மணி, தமிழியல் வித்தகர்
**அகளங்கன்**

வடக்கின் ஐந்து மாவட்டங்களில் கல்வி, கலை, இலக்கியச் செயற்பாடுகளில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக வவுனியா மாவட்டம் ஒரு காலத்தில் இருந்தது.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தோடு போட்டி போடுகின்ற சகல தகுதிகளும் படைத்த மாவட்டமாக வவுனியா மாவட்டம் பெரு வளர்ச்சி பெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் கல்வியிலும் கலை இலக்கியச் செயற்பாடுகளிலும் வன்னியின் சிறந்த மாவட்டமாக ஒரு காலத்தில் விளங்கியது.

மன்னார் மாவட்டம் நாட்டுக் கூத்துக் கலையில் பெரு வளர்ச்சி பெற்ற மாவட்டமாக இருந்தது. சிங்களக் கண்டிய நடனத்தினை மெருகூட்ட மன்னார் மாவட்ட நாட்டுக் கூத்துக்களே உதவின என பேராசிரியர் சரத் சந்திர குறிப்பிட்டதை வைத்துப் பார்க்கும்போது மன்னார் மாவட்டத்தின் கலைத் தரம் புலப்படும்.

கிளிநொச்சி மாவட்டம் வன்னியில் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தவர்களின் குடியேற்ற மாவட்டமாகவே திகழ்ந்தது. இருப்பினும் கல்வி, கலை, இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க பெரிய சாதனைகளைப் படைக்கவில்லை.

கிளிநொச்சியை விடவும் கலை இலக்கியத்துறையில் பின்தங்கிய மாவட்டமாகக் கருதத்தக்க வகையிலேயே வவுனியா மாவட்டம் இருந்தது. இது 1960 இற்கு முந்திய நிலை.

1960 இற்குப் பின் வவுனியா மாவட்டத்தின் இரு பெரும் பாடசாலைகளாக விளங்கிய வவுனியா மகாவித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் வளர்ச்சி வவுனியாவின் கல்வி, கலை, இ.லக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிக்கத் தொடங்கியது.

இவ்விரு பாடசாலைகளிலும் 1960 - 1970 வரையான காலப்பகுதியில் நடன ஆசிரியர்கள் யாரும் பணியாற்றவில்லை என்றே கருதுகின்றேன். அப்படிக் கடமையாற்றியிருந்தாலும் வவுனியாவின் நடன வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பு மிகக் குறைவு என்றே சொல்லலாம்.

1960 களின் ஆரம்பத்தில் வவுனியா மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய அமரர். நா. சண்முகானந்தா அவர்கள் பல மாணவர்களுக்கு நடனத்தைக் கற்பித்தார். பாடமாக அல்லாமல் பாடசாலைத் தேவைகளுக்காகக் கற்பித்தார். அவரிடம் நடனம் பயின்ற மாணவர்களில் நானும் ஒருவன். காவடி,கரகாட்டம் முதலான கிராமிய நடனங்களையே அவர் எமக்குக் கற்பித்தார். பின்பு பரதநாட்டடியத்தை கொஞ்சங் கொஞ்சமாக எமக்கு கற்பித்தார். அவரையே வவுனியாவில் பாடசாலை மட்டத்தில் நடனத்துறையின் முன்னோடியாக கருதலாம் என நினைக்கிறேன்.

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் கலைத் துறைப்பாடங்களைக் கற்பித்த அன்ரோனியா ரீச்சர் அப்பாடசாலை மாணவர்களுக்கு நடனம் கற்பித்தார்.

அங்கும் பாடசாலைத் தேவைகளுக்காக அவர் கிராமிய நடனங்களையே பெரிதும் கற்பித்தார். பரதநாட்டியம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் அக்காலத்தில் வவுனியா மாவட்ட பாடசலைகளில் இருக்கவில்லை.
பாவம், இராகம், தாளம் சேர்ந்த பரதக்கலையை சாஸ்திரிய முறைப்படி சிறப்பாக கற்பிக்கக் கூடிய ஆசிரிய மேகங்களை நோக்கி வறண்டு கிடந்தது வவுனியாக் கலைப்பூமி.

1970இன் பின் திருமதி துவாரகா கேதீஸ்வரன் அவர்களின் வருகை வறண்டு கிடந்த வவுனியா நகரத்து கலை மண்ணை நனைத்து குளிர்ப்படுத்தியது.

யாழ்ப்பாணத்து துவாரகா வவுனியா பண்டாரிகுளத்துக் கேதீஸ்வரனைத் திருமணம் செய்து வவுனியாவிலே வாழ்ந்ததனால் வவுனியா அதிஸ்டம் பெற்றது. இவர் பாடசாலை ஆசிரியராக(நடன) இருந்ததனால் பாடசாலையின் உள்ளும் வெளியிலும் பல மாணவர்களை இத்துறையில் பயிற்றுவிக்க முடிந்தது.

வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகளை வவுனியா மாணவர்கள் எடுப்பதற்கு இவரது வழிகாட்டல் முக்கியத்துவம் பெற்றது. இவரிடம் கல்வி கற்றவர்களில் முதன் முதலாக மட்டக்களப்பு விபுலாநந்த இசை நடனக் கல்லூரிக்குச் சென்று நடனம் பயின்றுவந்து வவுனியா மண்ணிற்குப் பெருமை சேர்த்தவர் திருமதி.துஸ்யந்தி வேலுப்பிள்ளை ஆவார். இவர் நடனப் பள்ளியை நடத்தி வவுனியாவில் கலைச் சேவை ஆற்றி வருகின்றார். நடன ஆசிரியையாக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் பணியாற்றுகிறார்.

துவாரகா கேதீஸ்வரன் அவர்கள் வவுனியா மண்ணின் பரத நாட்டிய வளர்ச்சியில் பங்குகொள்ளத் தொடங்கிய காலகட்டத்தில் துவாரகா பாலசேகரம் என்ற நடன ஆசிரியையும் வவுனியாவில் வாழவந்தார். பாலசேகரம் என்ற வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த தொழில் நுட்ப உத்தியோகத்தரை திருமணஞ் செய்து வவுனியாவில் வாழவந்த துவாரகா அவர்கள் பாடசாலை ஆசிரியையாகப் பணியாற்ற வில்லை. தனிப்பட்ட முறையில் நகரத்தில் வாழ்ந்த பல பிள்ளைகளுக்கு நாட்டியம் கற்றுக்கொடுத்தார்.

இந்த இருவரில் துவாரகா பாலசேகரம் அவர்கள் வவுனியாவை விட்டுச் சென்ற பின், திருமதி. துவாரகா கேதீஸ்வரன் அவர்கள் அரும்பணியாற்றினார். எனது நாட்டிய நாடகங்கள் சிலவற்றை அவர் மேடையேற்றியிருக்கிறார். குறிப்பாக வவுனியா சாயி சமுர்த்தி கட்டிடத்திறப்பு விழாவின் போது எனது ஒருமணி நேர "நம்பியா ரூரர்" நாட்டிய நாடகத்தைத் தயாரித்தளித்த சிறப்பைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இவரின் மாணவியாக, யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து இணைந்து கொண்ட சூரிய யாழினி இவர் விட்ட பணியைச் செம்மையாகப் பல மடங்கு சிறப்பாக ஆற்றிக்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. துவாரகா கேதீஸ்வரன் அவர்கள் ஒரு நாட்டியப்பள்ளியை நடாத்தி முறைப்படி பரதக்கலையை

வவுனியா மாணவர்களுக்கு வழங்கி வந்தார். அவரது பணி விரிவான ஆராய்ச்சிக்குரியது. அவர் இந்த மண்ணில் அழியாத தடம் பதித்தவர் என்பது மறக்கப்பட முடியாத உண்மை.
90 களின் பிற்பகுதியில் வவுனியா நாட்டியக்கலையின் உச்சத்தை நோக்கி வளரத்தொடங்கினாலும் 90 களின் ஆரம்பத்தில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரிய வந்த அமரர் விஜயலக்சுமி அவர்கள். நாட்டுப்புற இசையோடு கிராமிய நடனங்களை அருமையாக அரங்களித்தார்.

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா நிகழ்வுக்காக எனது பாடல்களுக்கு நடன வடிவம் கொடுத்ததையும், தனது கற்பனைத்திறத்தால் நாட்டார் பாட்டின் நுட்பங்களை நடனத்துறைக்குள் புகுத்தியதையும் மறக்க முடியாது. குறுகிய காலத்துக்குள் அவர் அமரரானது இந்த மண்ணின் துர் அதிஸ்டமே.
90 களின் ஆரம்பத்தில் திருமதி. துஸ்யந்தி வேலுப்பிள்ளை அவர்கள் தனது நடனப்பணியை வவுனியாவில் ஆரம்பித்தார். அவர் இந்த மண்ணைச் சேர்ந்தவர் என்பதால் நிரந்தரமாகவே பரத நாட்டிய வளர்ச்சியில் பங்கு கொண்டார். பாடசாலை மாணவர்களை தேசிய மட்டம் வரை அழைத்துச்சென்றார். அவர் தயாரித்த ‘வன்னி பாரம் பரியம்’ நடன நிகழ்வு இந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தது. தேசியத் தொலைக்காட்சியான ரூபவாகினியிலும் அவரது மாணவர்களின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின. அவர் இப்பொழுதும் ஓயாது பணியாற்றிவருகிறார். ஒரு மாணவிக்கு நாட்டிய அறங்கேற்றமும் செய்து வைத்தார்.

வவுனியாவின் நாட்டிய வளர்ச்சியின் உச்சத்தை திருமதி. சூரிய யாழினி வீரசிங்கம் அவர்களே எட்டிப்பிடித்துத்தர முயன்று கொண்டிருக்கிறார். வவுனியாவில் 1990 களின் ஆரம்பப்பகுதியில் கால் பதித்த சூரிய யாழினி தானும் முன்னேறி இந்த மண்ணையும் முன்னேற்றி இருக்கிறார்.

வவுனியாவில் முதன் முதல் ஒரு நாட்டிய அரங்கேற்றத்தை நிகழ்த்திக்காட்டிய சூரிய யாழினி தனது ஏழு(7)மாணவர்களின் நாட்டிய அரங்கேற்றங்களை இந்த மண்ணில் நிகழ்த்திக்காட்டி அசுர சாதனை படைத்துள்ளார்.

வவுனியாவில் மொத்தம் 12 நாட்டிய அரங்கேற்றங்கள் இதுவரையில் நிகழ்ந்துள்ளன. அவற்றில் 11 நாட்டிய அரங்கேற்றங்களில் வவுனியா மாணவர்களும் ஆசிரியர்களுமே பங்கேற்றனர். அந்தப் 11 நாட்டிய அரங்கேற்றங்களில் திருமறைக் காலமன்ற ஆசிரியை திருமதி. சூரிய கலா அமரநாதன் அவர்கள் ஒரே மேடையில் ஒரே நிகழ்வில் இரண்டு மாணவிகளின் அரங்கேற்றத்தை ஒன்றாக நடாத்தினார்.

திருமதி. துஸ்யந்தி வேலுப்பிள்ளை அவர்களின் ஒரு மாணவியும் திருமதி. கேசாந்தினி சிவகரன் அவர்களின் ஒரு மாணவனும் அரங்கேற்றம் கண்டனர். ஏனைய ஏழு அரங்கேற்றங்களையும் சூரிய யாழினி வீரசிங்கம் நிகழ்த்தினார். வவுனியாவின் முதலாவது ஆண்மகனின் அரங்கேற்றமாக சுஜேந்திரா அருந்தவ நாயகத்தின் அரங்கேற்றத்தை நிகழ்த்திக்காட்டிய சாதனை சூரிய யாழினிக்குரியது. அத்தோடு திருமதி. கேசாந்தினி சிவகரன் சூரிய யாழினியின் மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி என்ற பெயரில் தனது நாட்டியப் பள்ளியை ஆரம்பித்த சூரிய யாழினியிடம் பயின்ற பலர் நிருத்திய என்ற முதற் சொல்லைக் கொண்டு தமது நாட்டியப் பள்ளிகளை நடாத்தி வருகிறார்கள்.

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியினூடாக வடஇலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகளில் பங்கேற்கும் வசதியைச் செய்து கொடுத்துள்ளதோடு தமிழ்நாடு பாரதிதாசன் பல்கலைக்கழக கலைமாணிப் படிப்புக்களையும் படித்து பட்டம் பெற வழி அமைத்துள்ளார்.

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியில் பரத நாட்டியம் மட்டுமல்லாமல் ஏனைய கலைகளும் கற்பிக்க படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நகரத்துப் பிள்ளைகளுக்கு மட்டுமின்றி கிராமத்துப் பிள்ளைகளுக்கும் பரத நாட்டியத்தை கற்பிக்கின்ற நிறுவனமாக நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி விளங்குகின்றது.

வவுனியாவின் நாட்டியத்துறையில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்திய சூரிய யாழினி வீரசிங்கம் அவர்கள் பெரிதும் பாராட்டத்தக்கவர். அவரது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியும் பாராட்டத்தக்கது.
நாட்டிய நாடகத்துறை ஈழத்தில் பெரும் வளர்ச்சி பெற்ற இடமாக இப்பொழுது வவுனியா மாவட்டம் திகழ்கிறது. தேசிய மட்டத் தமிழ்த் தினப் போட்டியில் எனது எழுத்துருவாக்கத்தில் சூரிய யாழினி தயாரித்த, வவுனியா மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் பங்கு கொண்ட இரண்டு நாட்டிய நாடகங்கள் தொடர்ந்து முதற்ப் பரிசை வென்றன. அடுத்த ஆண்டு இரண்டாவது இடத்தை பெற்றது.

எனது பல பாடல்களுக்கு நாட்டிய வடிவம் கொடுத்து பலரையும் பாராட்ட வைத்தவர் சூரியயாழினி வீரசிங்கம் ஆவார்.

இந்த வகையில் வவுனியாவின் பரத நாட்டிய வளர்ச்சியில் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியினதும் சூரிய யாழினியினதும் பெரும் பங்கு பெரிதும் பாராட்டத்தகுந்தது.

ஆண்டு தோறும் ஆண்டு விழாக்களைப் பெரும் விழாக்களாக நடத்திப் பல மாணவர்களை (குழந்தை முதல்) மேடையேற்றி பரவசப்படுத்தி வரும் சூரிய யாழினி பற்றியும் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி பற்றியும் விரிவாக ஆராயப்பட வேண்டும்.



நன்றி

கல்லூரியில் நாட்டியக் கலையைப் பயிலும் மாணவர்கள்
















வவுனியா பிரதேச
கலை இலக்கியப் பெருவிழா



1995ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது ஆண்டு கலைவிழாவில்
அன்றைய அரசாங்க அதிபர் திரு.க.கணேஷ் வரவேற்கப்படுகின்றார்.



1995ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது ஆண்டு கலைவிழாவில்
வருகை தந்த விருந்தினர்கள்




1995ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது ஆண்டு கலைவிழாவில்
மாணவர்கள் ஆற்றிய கலைநிகழ்வில் ஒன்று



2009ம் ஆண்டு நடைபெற்ற கலை விழாவில் மாவட்ட கலாச்சார
உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தன் மங்கள விளக்கேற்றும் காட்சி

பிரதேச, மாவட்ட, மாகாண கலை இலக்கிய விழாக்களில் மாண்வர்கள்










# நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் வரலாறு

1994 ஆம் ஆண்டு வவுனியா இறம்பைக்குளத்தில் திரு. திருமதி இராமசாமி அவர்களின் இல்லத்தில் ஐந்து மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட வகுப்பானது 1995 ஆம் ஆண்டு 55 மாணவர்களுடன் தனது முதலாவது ஆண்டுக் கலைவிழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடியது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் 21.10.1995 அன்று தமிழ்மணி அகளங்கன் ஐயா அவர்களின் தலைமையில் 1ஆம் ஆண்டுக் கலைவிழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக அன்றைய பாராளுமன்ற உறுப்பினரான உயர் திரு. வை. பாலச்சந்திரன் அவர்களும், அன்றைய அரசாங்க அதிபராக இருந்த உயர்திரு. க. கணேஷ் அவர்களும், மாவட்டக் கல்விப் பணிப்பாளரான உயர்திரு. துரை.தியாகராஜா அவர்களும் வருகை தந்தார்கள். கௌரவ விருந்தினர்களாக அன்றைய நகரபிதா உயர்திரு ஜி.ரி.லிங்கநாதன் அவர்களும், பிரதேச செயலாளர் திருமதி இமெல்டா அற்புதராஜா அவர்களும் கலந்து கொண்டார்கள்.

அன்றைய தினம் எமது கல்லூரிக்கு "நிருத்திய நிகேதன கலாமன்றம்" என்ற பெயர் சூட்டப்பட்ட பதாகையை பிரதம விருந்தினர் அவர்கள் வைபவரீதியாகத் திரைநீக்கம் செய்து வைத்து மன்றத்துக்குரிய சீருடைகளையும் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

அன்றைய தினம், வரவேற்புரையை திரு. சொ. அருந்தவநாயகம் அவர்களும் நன்றியுரையை நடன ஆசிரியை திருமதி. வீ. சூரியயாழினி அவர்களும் நிகழ்த்தினார்கள் மாணவர்களது கலை நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட நிருத்திய நிகேதனக் கலாமன்றம் துரிதமாக பெருவளர்ச்சி அடைந்தது. தாண்டிக்குளத்திலும், இறம்பைக்குளத்திலும் இரு பகுதிகளாக வகுப்புக்கள் நடைபெற்றன. மாணவர் தொகை விரிவடையத் தொடங்கியது. இதனால் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் வவுனியா இந்து மாமன்றத் தலைவர் சிவநெறிப் புரவலர் இராமசாமி ஐயாவிடம் அனுமதி பெற்று நிருத்திய நிகேதனக் கலாமன்ற நடன வகுப்பை இந்து மாமன்றத்துக்கு மாற்றியமைத்தோம்.

காலை 8 மணி தொடக்கம் 2 மணிவரை இந்து மாமன்றத்திலும், மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை இறம்பைக்குளம் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திலும் வகுப்புக்கள் நடைபெற்றன. 3 வருடங்களில் மாணவர் தொகை 250 இற்கு மேற்பட்டதாக வளர்ச்சி அடைந்தது.

எமது இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அன்றைய நகரபிதா திரு.ஜி.ரி.லிங்கநாதன் அவர்கள் பெரிதும் உதவினார்கள். வவுனியா நகரசபை பௌர்ணமிக் கலைவிழாவை ஏற்பாடு செய்தது. அதிலே எமது மன்ற மாணவர்களது கலைவிழா மாதந்தோறும் நடைபெற்றது. இதனால் மாணவர்களது கலை ஆர்வம் மேலோங்கியது. அத்தோடு வவுனியாவில் நடைபெற்ற சகல கலை நிகழ்வுகளிலும் எமது மன்றம் பங்கேற்றது. இலக்கிய விழா கலாச்சாரவிழா, பௌர்ணமி விழா, சாகித்திய விழாவென அனைத்து நிகழ்வுகளுக்கும் கலை நிகழ்வுகளை எமது கலாமன்றம் வழங்கியது.

1994 ஆம் ஆண்டு தொடக்கம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் நடாத்தும் சரஸ்வதி பூஜை கலைவிழாவில் கலை நிகழ்வுகளை எமது மன்றம் வழங்கத் தொடங்கியது.

2002 ஆம் ஆண்டு தொடக்கம் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் மாலைநேர நடன வகுப்புக்களை நடாத்தியது. நிருத்திய நிகேதன கலா மன்றத்தை வளர்த்தெடுக்க உதவிய நிறுவனங்களில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தையும் இந்துமா மன்றத்தையும் மறக்க முடியாது. எவ்வித வேதனமும் வாங்காது இலவசமாகக் கட்டிடங்களை வழங்கியதோடு சரஸ்வதி பூஜை நேரத்தில் கலை நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்து மாணவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்த களம் அமைத்துக் கொடுத்தவர்கள் அன்று தொடக்கம் இன்று வரை இந்த நாட்டியக்கல்லூரி வளர்த்தெடுக்கப்பட வேண்டுமென தோளோடு தோள் நின்று உதவுகின்றார்கள்.

1993ம் ஆண்டுதொடக்கம் இக்கலாமன்றம் ரூபவாகினி தமிழ்ப் பிரிவில் பல நிகழ்வுகளை வழங்கியது. அன்றைய தயாரிப்பாளர்களான எஸ்.விஸ்வநாதன் அவர்களும், M.N.ராஜா அவர்களும் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து வன்னி மாணவர்களது கலை ஆக்கங்களை வெளியுலகிற்கு தெரியப்படுத்தினார்கள்.

நிருத்திய நிகேதன கலா மன்றத்திற்கு அதாவது எமது கலைநிகழ்வுகளுக்குரிய இசைப் பாடல்கள், அபிநய பாடல்கள் நாட்டிய நாடகங்கள் போன்றவற்றை எழுதித்தந்து நிகழ்வுகளை ஒத்திகை பார்த்து, நிகழ்வுகளுக்கு தலைமையேற்று நாடாத்துபவர் தமிழ்மணி அகளங்கன் ஐயா அவர்கள் அவர் அன்றுதொட்டு இன்றுவரை அப்பணியைச் செய்துவருகின்றார்.

1993 ஆம், 1994 ஆம், 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிருத்திய நிகேதன கலாமன்றம் ஹற்றன் ராகலை நுவரெலியா, மாத்தளை போன்ற பகுதிகளில் கலைநிகழ்வுகளை வழங்கியது.

இவ்வாறான நேரங்களில் எமக்குப் போக்குவரத்து வசதிகளை இலவசமாகச் செய்து தங்குமிட வசதிகளையும் செய்து தந்தவர் அன்றைய பாராளுமன்ற உறுப்பினரான திரு. வை. பாலச்சந்திரன் அவர்கள். இவர் எமது கலாமன்ற மாணவர்களை தனது பாராளுமன்ற விடுதியில் தங்கியிருந்து ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்குச் சென்று கலைநிகழ்வுகளை வழங்க ஏற்பாடு செய்து தந்தார். அவர் எமது கல்லூரிக்குப் பல விடயங்களில் பல உதவிகளைச் செய்துள்ளார்.
1998 ஆம் ஆண்டு மாணவர் தொகை அதிகரிக்க துணை ஆசிரியர்கள் முதன் முதலாக நியமிக்கப்பட்டார்கள். செல்வி. சிவஜோதி, செல்வி. சுஜித்தா சிற்றம்பலம் ஆகியோர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு ஆசிரியருடன் இணைந்து கற்பித்தார்கள்.

மாணவர்கள் வட இலங்கை சங்கீதசபை பரதநாட்டியப் பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்கள். தேசிய இளைஞர் பரிசளிப்புப் போட்டியில் கலாச்சாரப் போட்டிகளில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றார்கள். மாணவர்களின் சாதனை பற்றிய விபரம் அடுத்துவரும் பாகங்களில் இடம்பெறுகின்றது.

ஆரம்பகால மிருதங்க இசை வித்துவானாக திரு. க. கனகேஸ்வரன் அவர்கள் விளங்குகின்றார்கள். திருமதி விமலலோஜினி கனகேஸ்வரன் அவர்கள் வயலின் இசை வழங்கி வருகின்றார்கள்.

இசையாசிரியர்கள் வரிசையில் ஆரம்ப காலத்தில் வசந்தி கண்ணனும் பின்னர் உமாமகேஸ்வரி விமலநாதசர்மா, தேவமனோகரி நாகேஸ்பரன், வதனி ஸ்ரீதரன், கீர்த்தனா கமலதாஸ் போன்றோர்

இசை வழங்கி வருகின்றார்கள். தற்போது அருந்ததி சிவக்கொழுந்தும் இசை வழங்கி வருகின்றார். வதனி ஸ்ரீதரன் நீண்ட காலமாக எமக்கு இசை வழங்கி வருகின்றார்.

தற்போது நாட்டியப் பாடல்களுக்கு இசையமைப்புச் செய்து ஒலிப்பதிவு செய்து தருவதில் கந்தப்பு ஜெயந்தனும் அவரது சகோதரன் ஜெயரூபனும் எமக்கு உதவுகின்றார்கள்.

முதன் முதலாக வவுனியா மண்ணிலே பரத நாட்டிய அரங்கேற்றத்தை ஆரம்பித்து வைத்த பெருமை எமது கல்லூரிக்கே உரித்தாகும். 1996 ஆம் ஆண்டு செல்வி. பிரதீபா இராமசாமி அவர்கள் தனது 11 வது வயதில் முதலாவது அரங்கேற்றத்தை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து பல அரங்கேற்றங்களை எமது கல்லூரி மாணவர்கள் பலர் செய்தார்கள். அவர்கள் விபரம் அடுத்துவரும் பகுதிகளில் இடம்பெறுகின்றது.

2003 ஆம் ஆண்டு எமது கலாமன்றம் வடக்கு கிழக்கு மாகாண கலை பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் பதிவு செய்யப்பட்டு 2005 ஆம் ஆண்டு "நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி" ஆக மாற்றமடைந்தது.

மாணவர் தொகை அதிகரிக்க கல்லூரியின் வளர்ச்சியினை முன்னெடுப்பதற்குச் செயற்குழு முதன் முதலாக உருவாக்கப்பட்டது. செயற்குழுவின் தலைவராக திருமதி சூரியயாழினி வீரசிங்கம் செயற்படுகின்றார். இரண்டு வருடத்திற்கு ஒருமுறை புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

எமது கல்லூரியானது வவுனியா நகரப் பகுதியை மட்டுமல்லாது கோவிற்குளம், வேப்பங்குளம், நெளுக்குளம் ஆகிய பகுதிகளிலும் இயங்கி வருகின்றது. நெளுக்குளம், வேப்பங்குளம் பகுதிகளுக்கு செல்வன் அருந்தவநாயகம் சுஜேந்திரா பொறுப்பாக விளங்குகின்றார். எமது கல்லூரி மூலம் வறுமைப்பட்ட மாணவர்களுக்கும் இலவசமாக கலை போதிக்கப்படுகின்றது.

எமது கல்லூரி வவுனியா மாவட்டத்தில் மட்டுமன்றி இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கலை நிகழ்வை வழங்கியுள்ளது. கலைவிழா, கலாச்சாரவிழா இலக்கியவிழா சிறுவர்தினவிழா, புதிய கட்டடத் திறப்பு விழா, நூலகவிழா, பௌர்ணமிவிழா, கோயிற்திருவிழாக்கள், கும்பாபிஷேகம், சுதந்திரதினவிழா, வடக்கின் வசந்தம், உள்ளூராட்சிவாரவிழா என பல விழாக்களிலும் எமது கல்லூரி நிகழ்வுகளை வழங்கியுள்ளது. இதுவரை 2000 இற்கு மேற்பட்ட நிகழ்வுகளை மேடையேற்றிய பெருமை எமது கல்லூரிக்கே உரித்தாகின்றது.

எமது கல்லூரி 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மாதந்தோறும் பௌர்ணமி விழா நடாத்தியது. இதற்குரிய சான்றிதழ்களை மாணவருக்குக் கொடுப்பதற்கு வவுனியா கந்தசாமி கோவில் நிர்வாகத்தினர் எமக்கு சான்றிதழ்களை அன்பளிப்புச் செய்தார்கள்.

இலங்கையில் வன்னி மாவட்டத்தைப் பிரதிபலிக்கும் ஒரு குழுவின் ஆக்கங்களாக எமது கல்லூரி மாணவர்களின் நிகழ்வுகள் அமைகின்றன. வவுனியா மடுகந்தை கலாச்சார மத்திய நிலையத்தின் ஊடாக எமது மாணவர்கள் பல சாதனைகளை புரிந்துள்ளார்கள். தேசிய நடன விழாவில் வருடம் தோறும் நடைபெறும் போட்டியில் பங்குபற்றுவதோடு வெற்றியீட்டியும் வருகின்றார்கள்.

தற்போது எமது கல்லூரி பெருந்தொகை மாணவர்களோடு நாட்டிய வகுப்பை நடாத்துகின்றது.

மிருதங்க இசை வகுப்புக்களும் நடைபெறுகின்றன. 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இக்கல்லூரியில் பயில்கின்றனர். எந்த நிறுவனமும் எந்நேரம் கேட்டாலும் மறுக்காது எமது நிறுவனம் கலைநிகழ்வுகளை வழங்கி வருகின்றது. ஒரு சேவையாகவே அனைத்து செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

பாமினி விநாயகமூர்த்தி, சுஜேந்திரா அருந்தவநாயகம், சுதர்சினி மோகனராசா ஜான்சி செல்வமோகன், திவ்யமதி செல்லத்துரை ஆகியோர் ஆசிரியர்களாக கடமை புரிகின்றனர். இவர்கள் அனைவரும் எமது கல்லூரி மாணவர்களாக இருந்து ஆசிரியர்களானவர்கள். இதைவிட சிரேஸ்ட மாணவர்கள் சிறிய மாணவர்களுக்கு கற்பிக்கின்றனர்.
2008 ஆம் ஆண்டு எமது கல்லூரி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி இந்தியாவுடன் இணைந்து நாட்டியக் கலையில் சிறுவர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி Diploma கற்கைநெறிகளை ஆரம்பித்து வகுப்புக்களை நடாத்தி வருகின்றது.

அத்தோடு இடம்பெயர்ந்து முகாம்களில் வேதனைகளோடு இருந்த மக்களின் மனங்களை, உள்ளங்களை மாற்றி அவர்களை மகிழ்ச்சிப்படுத்த கலை நிகழ்வுகளை எமது கல்லூரியே வழங்கியது. அத்தோடு வவுனியா அகிலாண்டேஸ்வரர் அன்பக மாணவர்களுக்கும் "சிறிலிய செவன" மாணவர்களுக்கும் அவர்கள் இல்லம் சென்று நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி ஆசிரியர்கள் நாட்டியப் பயிற்சியை வழங்கி வருகின்றார்கள். இது சேவை நோக்குடனேயே செய்யப்படுகின்ற ஒரு நிகழ்வாகும்.

வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான உயர்திரு. சதாசிவம் கனகரட்ணம் அவர்கள் எமது கல்லூரிக்கு மாணவர்களுக்கு ஒப்பனைப் பொருட்கள் வாங்குவதற்கும் ஒலியமைப்பிற்குரிய உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்தார். அதே போல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான உயர்திரு சிவநாதன் கிஷோர் அவர்கள் எமது கல்லூரிக்கு கணணி ஒன்றினை அன்பளிப்பு செய்தார்.

இப்போது நாம் வன்னி மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர்களான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவர்களிடமும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அவர்களிடமும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனிடமும் உதவி கேட்டுள்ளோம். அவர்களும் உதவி செய்வதாக கூறியுள்ளார்கள்.

## எமது தேவைகளும் பிரச்சினைகளும்

எமது கல்லூரி தொடங்கி 16 ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. வட மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சில் எமது கல்லூரியை பதிவு செய்துள்ளோம். இலாப நோக்கம் கருதாது சேவை நோக்கோடு செயற்பட்டு வருகின்றோம். யாரிடமும் எந்த நிகழ்வை வழங்கினாலும் எவ்வித கொடுப்பனவுகளும் கேட்பதில்லை.

எம்மிடம் கிட்டத்தட்ட 500க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கின்றார்கள். சங்கீத,மிருதங்க நடன வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இந்து மாமன்றத்தை முழுநேரப் பாவனையாக நாமே கூடுதலாக பாவிக்கின்றோம். இதற்கு நாம் தலைவருக்கும் நிர்வாக உறுப்பினர்களுக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்திலும் வகுப்பை, பயிற்சிப் பட்டறைகளை நடாத்தினோம். இப்பொழுதும் நடாத்திக் கொண்டு இருக்கிறோம். இதற்காக

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவருக்கும் நிர்வாக சபை உறுப்பினருக்கும் நன்றி கூறுகின்றோம்.

கோயிற்குளத்தில் 26/56 கோவில் புதுக்குளம் என்ற நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரிப் பொறுப்பாசிரியர் இல்லத்தில் ஒரு மண்டபத்தில் வகுப்புக்கள் நடை பெறுகின்றன. வேப்பங்குளத்தில் 6 ஆம் ஒழுங்கையில் திருமதி இ. வன்னியசிங்கம் வீட்டில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. நெளுக்குளத்தில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் (RDS) வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

நாம் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வகுப்புக்களை நடாத்துகின்றோம். மழை நேரத்தில் தூவானம், ஒழுக்கு, இடப்பற்றாக்குறை போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். மாணவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகள் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை இருக்கின்றது.

எமது தேவைகள்

- எமக்கென்று ஒரு நிரந்தரமான காணி வசதி தேவை.
- நிரந்தரமான காணியில் சிறந்ததொரு கலைக் கூடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.
- எமது கல்லூரிக்கு மிருதங்கம், வயலின், சுருதிப்பெட்டி, தம்புரா, நட்டுவாங்கத்தாளம், ஓகன், தபேலா, உடுக்கு போன்ற வாத்தியங்கள் தேவை.
- தளபாடப் பற்றாக்குறை, மேசை, கதிரைகள், அலுமாரி போன்ற தளபாட வசதிகள் எம்மிடம் இல்லை.

மேலே குறிப்பிட்டவற்றில் மிகப்பாரிய பிரச்சினை எமக்கென்று ஒரு நிரந்தரக் காணி இல்லாமையே. காணி கிடைத்தால் எப்படியும் சிறுகச்சிறுகச் சேமித்து வவுனியாவில் சிறந்ததொரு கலைக் கூடத்தை நிறுவுவோம். எதிர்காலத்தில் ஒரு நாள் எமது கல்லூரி பல்கலைக் கழக அந்தஸ்தை எட்டக் கூடிய காலம் வரும்.

அரச சார்பான நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் சமூக நிறுவனங்கள் யாவற்றிற்கும் நாம் இலவசமாக கலை நிகழ்வை வழங்குகின்றோம். யாருமே எமக்கு உதவி செய்ய முன்வரவில்லை.

இடப் பற்றாக்குறை காரணமாக இந்து மாமன்ற வளாகத்திற்குள் இரண்டு இலட்சம் ரூபா செலவில் மூன்று கொட்டகைகளைப் போட்டு வகுப்புக்கள் நடாத்துகின்றோம். எம்மிடம் திறமை இருக்கின்றது ஆனால் பணம் இல்லை. நாம் யாரிடமும் இதுவரை உதவி கேட்டதில்லை.

இப்போது உதவி கேட்கின்றோம். எமக்கு நிரந்தரக் காணியைப் பெற்றுத்தர சமூகத்தில் உள்ள பெரியார்கள் நிறுவனங்கள், அரச உயர் அதிகாரிகள் முன்வரவேண்டும். எமது பழைய மாணவர்கள் பெற்றோர்கள் எல்லோருமாகச் சேர்ந்து வவுனியாவில் சிறந்த கலைக் கூடத்தை நிறுவவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, மட்டக்களப்பில் விபுலானந்தா இசைநடனக் கல்லூரி இன்று பல்கலைக் கழக அந்தஸ்தை பெற்று உயர்வடையவில்லையா? அதே போல வவுனியாவில் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி வளர்ச்சிபெற வன்னிப் பெரியோர்கள், கல்விமான்கள் சமூகசேவை நிறுவனத் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

# நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் யாப்பு

விதிமுறைகள்

பெயர் : நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி வவுனியா

முகவரி : 26/56, கோயிற்புதுக்குளம், வவுனியா.
இந்துமாமன்றம் பூங்கா வீதி, வவுனியா.

**எல்லை**: வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி தனது செயற்பாடுகளை இலங்கை பூராகவும் கொண்டுள்ளது. வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரிக்கென நிரந்தர அலுவலகம் கிடைக்கும் வரை பூங்கா வீதியில் அமைந்துள்ள இந்து மாமன்றத்திலும் 26/56 கோவிற்புதுக்குளத்திலும் அமைந்திருந்து செயற்பாடுகளும் அங்கு நடைபெறும். அத்தோடு 26/56 எனும் கோவிற்புதுக்குள முகவரியைத் தற்போது நிரந்தரமாகக் கொண்டுள்ளது.

நோக்கங்கள்

- பரதக் கலையைப் பயில விரும்பும் அனைவருக்கும் பரதக் கலையினைப் போதித்து அவர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்து ஊக்குவித்தல்.
- க.பொ.த சாதாரண, க.பொ.த உயர்தரங்களில் நடன பாடம் எடுக்கும் மாணவர்களுக்கும் வட இலங்கை சங்கீத சபை பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கும் விசேட பயிற்சி வழங்கி பரீட்சைக்குத் தயார் செய்தல்.
- பரதக் கலை தொடர்பான போட்டிகள் நடைபெறும் பொழுது மாணவர்களைப் பங்கு பெறச் செய்தல்.
- கலை விழாக்கள் நடாத்துதல், வெளி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல், தொலைக் காட்சியில் பங்கு பெறச் செய்தல், போன்ற செயற்பாடுகளில் மாணவரை ஊக்கப்படுத்தித் தயார் செய்தல்.
- மாணவரைக் கலை ஆர்வம் மிக்கவராகவும் ஒழுக்க சீலர்களாகவும் சமூகத்திற்கு பயன்படுமாறு வெளிக் கொணர்தல். கலைகள் மூலம் சமூகத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்துதல்.
- வறுமைப்பட்ட மாணவர்களுக்கு கலையார்வம் மிக்க கலைஞர்களுக்கு இலவசமாக கலைகளைப் போதித்தல்.

- இணைப்பாட விதான செயற்பாட்டின் மூலம் மாணவர்களின் ஆளுமைத் திறன்களை விருத்தி செய்வதோடு அம் மாணவர்களின் உயர் கல்விக்கு சிறந்த புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்து கல்வியை மேம்படுத்தல்.

- கல்லூரிக்கென ஒரு பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தித் தவணைகளாகப் பிரித்துப் பரீட்சை நடாத்திச் சான்றிதழ் வழங்குதல்.
- கலைநுட்பம் வாய்ந்த புகழ் பெற்ற கலைஞர்களை அழைத்து மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறையை நடாத்துதல். அவர்களின் கலை நிகழ்வுகளைப் பார்வையிடச் செய்தல்.

- எதிர்காலத்தில் இந்தியாவில் மேற்கொள்ளும் பட்டப் படிப்பை எமது கல்லூரியில் இருந்தே மேற்கொள்ளக் கூடிய வசதி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அந்தப் பட்டப் படிப்பு நிறுவனத்துடன் கல்லூரியும் இணைந்து செயற்படல்.

அங்கத்தினர்கள்

கலையில் ஆர்வமுள்ள தமிழ், சிங்கள, முஸ்லீம் அனைவரும் அங்கத்தவராக சேரமுடியும். அங்கத்துவப் பணமாக மாதாந்தம் 30 ரூபாவும் அல்லது வருடாந்தம் 360 ரூபாவும் அல்லது ஆயுட்சந்தாவாக 1000 ரூபாவும் செலுத்தி மன்றத்தின் அங்கத்தவராக சேர்ந்து கொள்ள முடியும்.

அங்கத்தவர்கள் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு எழு நாட்களுக்கு முன்பு தமது உறுப்புரிமையை புதுப்பித்து உறுதிப்படுத்த வேண்டும். ஆயுட் சந்தா கட்டியவர்களுக்கு இது விதிவிலக்கு. மன்றத்தின் காப்பாளருக்கு அல்லது போசகருக்கு இதிலிருந்து விதிவிலக்காகும்.

பொதுச்சபை

மன்றத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் உறுப்புரிமை செல்லுபடியாகும் காலம் வரை அதிகாரம் வாய்ந்த பொதுச்சபை உறுப்பினர்களாக இருப்பர்.

மன்றத்தின் செயற்பாடுகள், நோக்கங்கள் என்பவற்றைத் தீர்மானிப்பதில் அதிகாரம் உள்ளவர்களாகவும், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கலைத்துறைக்கான உபகுழுக்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பு உடையவராகவும் அமைவார்கள்.

பொதுக் கூட்டம்

மன்றத்தின் நிர்வாகிகள் செயற்குழுவைத் தெரிவுசெய்து செயற்படத் தொடங்கிய தினத்தில் இருந்து ஒரு வருடத்தில் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடாத்தப் படவேண்டும்.
ஒரு வார கால முன்னறிவித்தலின் பின் தேவையான போதும் பொதுச்சபை அங்கத்தவர்களின் 2/3 பகுதியினரின் எழுத்து மூலமான வேண்டுகோளின் பெயரிலும் விசேட பொதுக் கூட்டம் கூட்டலாம். பொதுக் கூட்டம் கூடுவதற்கு 1/4 பங்கு அங்கத்தினர் கோரம் தேவையாகும்.

தலைவர்

மன்றத்தின் பொறுப்பாசிரியரே என்றைக்கும் தலைவராக இருப்பார். இவரே மன்றத்தின்

கூட்டங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் பொறுப்பாக இருந்து தலைமை வகித்து நடாத்துவார். தலைவர் இல்லாத சமயங்களில் உபதலைவர் ஒருவர் தலைமை தாங்கிக் கூட்டத்தை, நிகழ்ச்சியை நடாத்தும் அதிகாரம் உடையவராக இருப்பர். அதுவும் இல்லாதவிடத்து போசகர் தலைமை தாங்கி நடாத்துவார்.

செயலாளர்

மன்றத்தின் கூட்டங்கள் நிகழ்ச்சிகள் என்பவற்றை அங்கத்தினர்களுக்கு அறிவித்து அழைக்கவும், இவைகள் தொடர்பான அறிக்கைகள், பதிவுகளை வைத்திருக்கவும், மன்றத்தின் சார்பில் சகல கடிதப் போக்குவரத்துக்களைச் செய்யவும் அதிகாரம் உடையவராக இருப்பார்.

பொருளாளர்

மன்றத்தின் நிதிகள் மற்றும் நிதியோடு சம்பந்தப்பட்ட யாவற்றிற்கும் இவரே பொறுப்பாவார். நிதியில் வரவு, செலவு, இருப்பு போன்ற விபரங்களைப் பதிவு செய்து வைத்திருக்கவும் கணக்கறிக்கைகளைத் தயாரித்து கூட்டங்களில் சமர்ப்பிக்கவும் அதிகாரம் வாய்ந்தவராக இருப்பார்.

செயற்குழு

தலைவர் ஒருவரும், துணைத் தலைவர் ஒருவரும், செயலாளர், துணைச் செயலாளர் என இருவரும் பொருளாளரும் உட்பட 12 பேர் அடங்கிய செயற்குழுவும் வருடாந்தம் தெரிவு செய்யப்படும். இக்குழு மன்றத்தின் இலக்குகளை அடைவதற்கும் சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பானதாக இருக்கும்.

செயற்குழு மாதாந்தம் கூடவேண்டும். 2/3 செயற்குழு உறுப்பினர்கள் விரும்பும் பட்சத்தில் செயற்குழு கூட்டப்பட வேண்டும். தொடர்ச்சியாக மூன்று செயற்குழுக் கூட்டத்திற்கு சமூகம் தராதவிடத்து அங்கத்தவர் பதவியை இழப்பர். முன்னறிவித்தல் தந்தால் இதற்கு விதிவிலக்கு.

போசகர்கள்

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கல்வி மான்கள் கலை ஆர்வம் மிக்கவர்கள். மன்றத்தின் போசகர்களாக செயற்படுவார்கள். மன்றத்தின் போசகர்களாக நான்கு பேர் செயற்படுவார்கள்.

நிதி

சகல நிதியும் வங்கியொன்றில் கல்லூரியின் பெயரினால் வைப்பில் இடவேண்டும். வங்கியில் இருந்து நிதியை எடுப்பதற்கும் மன்றத்தின் கொடுப்பனவுகளுக்கும் என காசோலைகளில் பொருளாளருடன் தலைவர் அல்லது செயலாளர் ஒருவரும் கையெழுத்திடுவதற்கு அதிகாரமுடையவராக இருப்பார்கள்.

நிதி சேகரிக்கும் முறை

- அங்கத்துவப் பணம் மூலம்
- அன்பளிப்புக்கள் மூலம்

- கல்லூரியில் பயிலும் ஒவ்வொரு மாணவரிடத்தும் அறவிடப்படும் மாதாந்தக் கட்டணத்தில் இருபது ரூபா கல்லூரி நிதிக்குச் சேகரிக்கப்படும்.

- புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் அனுமதிக் கட்டணம் மூலம் நிதி சேகரிக்கப்படும். (விஜயதசமி, தைப்பூசம், சேர்க்கப்படும் மாணவர்களுக்கு அனுமதி இலவசம்)

- வேறு வழிகளில் சேர்க்கப்படும் நிதி போன்றவற்றின் மூலம் நிதி அறவிடப்படுகின்றது.

கணக்கறிக்கைகள்

நிதி சம்பந்தமான கணக்கறிக்கைகள் யாவும் மாதாந்த செயற்குழுக் கூட்டத்தில் பொருளாளரினால் சமர்ப்பிக்கப்படவேண்டும். இவ்வறிக்கைகள் என் பார்வையாளரினால் பார்வையிடப்பட்டு வருடாந்த பொதுக் கூட்டத்தில் அங்கத்தினர்களின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவேண்டும்.

கணக்காய்வாளர்

கல்லூரியின் வருடாந்த கணக்கறிக்கையை ஆய்வு செய்து அறிக்கையை செயற்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

கல்லூரியின் முகாமைத்துவம்

கல்லூரியின் அனைத்துச் செயற்பாட்டுக்கும் கல்லூரியின் தலைவரே பொறுப்பாளராவார். செயற்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று தலைவர் கல்லூரிக்கு தேவைப்படும் இடத்து ஆசிரியர்களை நியமிக்கலாம். வேறு தேவைகளுக்கான ஆளணியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

## நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியில் மாணவர்களை அனுமதிக்கும் முறை

- மூன்று வயது தொடக்கம் அதற்கு மேற்பட்ட அனைத்து சிறார்களுக்கும் கலையைப் பயிலும் உரிமை உண்டு.

- வகுப்பில் அனுமதிக்கும் போது அனுமதிக் கட்டணம் ரூபா 200 (இருநூறு) செலுத்தி பற்றுச் சீட்டைப் பெறவேண்டும்.

- அனுமதிக் கட்டணப் பணம் கல்லூரிக்குரியதாகும். இது கல்லூரியின் நிதிக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும்.

- கல்லூரியின் சீருடையுடன் மாணவர்கள் வகுப்பிற்கு பிரவேசிக்கவேண்டும்.

- விஜயதசமி, தைப்பூசத்தில் அனுமதிக்கப்பெறும் மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் தேவையில்லை.

- வறுமைப்பட்ட மிகவும் கஸ்ரப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக கலை பயிலும் சந்தர்ப்பம் வழங்கப்படும் (இதில் அதிபரின் முடிவே முடிவாகும்.



# நிருத்திய நிகேதனமும் கலைக் காவிரியும்

இந்தியாவில் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ளது. அது பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பல்கலைக் கழக அந்தஸ்து பெற்றுள்ளது.

எமது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி நோக்கத்தில் ஒன்றே, எதிர்காலத்தில் இந்தியாவில் மேற்கொள்ளும் பட்டப்படிப்பை எமது கல்லூரியிலிருந்தே மேற்கொள்ளக் கூடிய வசதி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதோடு அந்தப் பட்டப்படிப்பு நிறுவனத்துடன் கல்லூரியும் இணைந்து செயற்படல்.

அந்தக் கனவு 2008 ஆம் ஆண்டு நிறைவேறியது. 2008 ஆம் ஆண்டு இலங்கையில் இந்தியா கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி இணைப்பாளராக இருந்த திருமதி ஷகிலா கவிந்தன் அவர்களின் முயற்சியால் நாம் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி இயக்குனராக விளங்கிய அருட்தந்தை ஜோர்ச் அடிகளாரிடம் எமது விருப்பத்தைத் தெரிவித்தோம். அவரும் எமது கல்லூரியின் தரத்தை விசாரித்து பூரண சம்மதம் தந்தார்.

2008 ஆம் ஆண்டு வைபவ ரீதியாக வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாச்சார மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. கலைக்காவிரி இணைப்பாளர் (இலங்கை) திருமதி ஷகிலா கவிந்தன் வருகை தந்திருந்தார். இந்நிகழ்விற்கு அன்றைய வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு சிவநாதன் கிஷோர் அவர்கள் பிரதம அதிதியாக வருகை தந்திருந்தார். சமூகத்தில் உள்ள உயர் கல்விமான்கள் உட்பட பல சமூகப் பெரியார்கள் கலைஞர்கள் வருகை தந்திருந்தார்கள். அன்றைய தினம் சிறுவர்களுக்கான சான்றிதழ் பயிற்சி டிப்ளோமா பரதநாட்டிய டிப்ளோமா மற்றும் நாட்டியக் கலைமாணி, முதுகலைமாணி, ஆகிய பாட நெறிகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

சான்றிதழ் பயிற்சி டிப்ளோமா கற்கை நெறிக்கு
- 1 ஆம் வருடம் 58 மாணவர்களும்
- 2 ஆம் வருடம் 07 மாணவர்களும்
- டிப்ளோமா 01 மாணவியும்

பதிவு செய்தார்கள். நாட்டியக் கலைமாணி, முதுகலைமாணி பட்டப்படிப்பிற்கான வசதிகளை மேற்கொண்டோம்.

கேசாந்தினி தனபாலசிங்கம் நாட்டியக் கலைமாணி பட்டப் படிப்பை பூர்த்தி செய்துள்ளார். திவ்யமதி செல்லத்துரை தற்போது 3 ஆம் வருட மாணவியாக (B.FA) கற்றுக் கொண்டிருக்கின்றார். செல்வன் அருந்தவநாயகம் சுஜேந்திரா (B.FA) 1 ஆம் வருட மாணவன், செல்வி பாமினி விநாயகமூர்த்தி (M.FA) முதுகலைமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார்.

சான்றிதழ் பயிற்சி (Certificate course) 1ஆம் வருடப் பரீட்சை சென்ற வருடம் 22.09.2009 நடைபெற்றது. வெகு விரைவில் இரண்டாம் மூன்றாம் வருட பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன.

அருட்தந்தை எஸ்.எம் ஜார்ஜ் அடிகளாருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அவரது ஆசீர்வாதத்தை இறைஞ்சி நிற்கின்றோம். இம்முறை முதலாம் வருடத்தில், 2 ஆம் வருடத்தில் மூன்றாம் வருடத்தில் டிப்ளோமா பரீட்சையில் மொத்தம் 46 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள்.

# எமது கல்லூரி இதுவரை நடாத்திய கலை நிகழ்வுகள் பற்றிய விபரம்

1992 ஆம் ஆண்டிலிருந்து 1998 ஆம் ஆண்டுவரை வவுனியா நகரசபை நடாத்திய பௌர்ணமிக் கலைவிழாவில் தொடர்ச்சியாக நாட்டிய நிகழ்வுகளை வழங்கியமை

1994 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை வவுனியா பிரதேச செயலகம் நடாத்தும் இலக்கியவிழா கலாச்சாரவிழா மாவட்ட இலக்கியவிழா சாகித்தியவிழா ஆகியவற்றில் கலை நிகழ்வுகளை வழங்கியமை.

வவுனியா நகரசபை பொது நூலக ஆண்டு விழாக்களில் கலை நிகழ்வுகளை வழங்கியமை.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினால் நடாத்தப்படும் சரஸ்வதி பூஜை கலைவிழாவில் 1994 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கலை நிகழ்வுகளை வழங்குகின்றமை.

வவுனியா மாவட்டக் கலாச்சார விழா இலக்கியவிழா சாகித்திய விழாக்களில் கலை நிகழ்வுகளை 1994 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் வழங்கி வருகின்றமை.

எமது கல்லூரியின் கலை விழாவில் 1995 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கலை நிகழ்வுகள் இடம்பெறுகின்றமை.

இந்துமாமன்றம் நடாத்துகின்ற நவராத்திரிக் கலைவிழாவில் 1996 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கலை நிகழ்வுகள் செய்தல்.

வவுனியா பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற கலை இலக்கிய விழாக்கள் நவராத்திரி விழாக்களில் கலை நிகழ்வுகளை வழங்கியமை.

வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெறும் சிவராத்திரி மகோற்சவப் பெருவிழாவில் 1997 ஆம் ஆண்டில் இருந்து கலை நிகழ்வுகள் வழங்குதல்.

வவுனியா கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தில் தொடர்ச்சியாக 10 நாட்கள் கலை நிகழ்வுகளை 2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை வழங்குதல். இதில் 250 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றுவார்கள்.

2001 ஆம் ஆண்டு மாத்தளையில் பள்ளேபொல பிதேச வாசிகசாலை கலாச்சார மண்டபத்தில் சமாதான கலைநிகழ்வுகளில் வவுனியா மாவட்டம் சார்பாக கலை நிகழ்வுகளை வழங்கியமை.
2002 ஆம் ஆண்டு போரூட் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கிராம முகாமைத்துவத்திற்கான நிறுவனங்களின் சம்மேளனம் நடாத்திய பல்சுவை கதம்ப நிகழ்ச்சியில் கலை நிகழ்வுகளை வழங்கியமை.

2வது உலக இந்து மாநாடு நடைபெற்றபோது கலைநிகழ்வுகளை (2003.05.02) வழங்கி சிறப்பித்தமை.

கல்வியமைச்சு இசுறுபாயவில் சரஸ்வதி பூஜை தினத்தை முன்னிட்டு 2003 ஆம் ஆண்டு கலை நிகழ்வுகளை வழங்கியமை.மடுகந்தை கலாச்சார மத்திய நிலையத்தினூடாக 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தேசிய நாட்டிய விழாவில் அகில இலங்கை ரீதியில் பங்கு பற்றி கலை நிகழ்வுகளை வழங்கியமை.
2005 ஆம் ஆண்டு ஆடி மாதம் இருபத்தொன்பதாம் திகதி வீரமணிஐயரின் நினைவுதின வைபவத்திற்கு அவரின் இல்லத்திற்குச் சென்று நினைவுதின விழாவில் கலைநிகழ்வு நடாத்தியமை. (2005.07.29)

16.10.2005 இல் வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி அருளக மாணவர்களும் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியும் இணைந்து கலை விழா நடாத்தியமை.

2006 ஆம் ஆண்டு வவுனியா அந்தணர் ஒன்றியம் நடாத்திய சைவ சமயப் போட்டி பரிசளிப்பு விழாவில் கலை நிகழ்வுகளை வழங்கியமை.

2007 ஆம் ஆண்டு வவுனியா வைத்தியசாலை வைத்தியர்களின் ஆண்டு நிறைவு ஒன்று கூடல் நிகழ்வில் சிறப்பான கலை நிகழ்வை வழங்கியமை.

2008.03.06 இல் வவுனியா வைத்தியசாலையில் சிவராத்திரி விழாவை முன்னிட்டு சிறப்பான கலை நிகழ்வுகளை வழங்கியமை.

2007, 2008 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக பௌர்ணமி கலைவிழா சிறப்பாக நடாத்தியதோடு யோகாசனப் பயிற்சிப் பட்டறை நாட்டியப் பயிற்சிப் பட்டறை விரிவுரைகள் முதலியவற்றை நடாத்தியமை.

வவுனியா தமிழ்ச் சங்கம் 2009 இல் நடாத்திய இசை விழாவில் நாட்டிய நிகழ்வு வழங்கியமை.

சக்தி தொலைக் காட்சியில் 2009 ஆம் ஆண்டு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற Dance festival நிகழ்வில் பங்குபற்றியமை.



நடன ஆசிரியை திருமதி.சூரியயாழினி அவர்களுடன் மாணவி



சாங்கீத ஆசிரியர் திருமதி.வதனி ஸ்ரீதரன் அவர்களுடன் மாணவர்கள்



மிருதங்க ஆசிரியர் திரு.க.கனகேஸ்வரன் அவர்களுடன் மாணவர்கள்



2010 சக்தி ரீவியின் டான்சின் சுப்பஸ்ரார் நிகழ்வில் பங்குபற்றிய மாணவர் குழு



2010ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற வடக்கின் வசந்த கலை நிகழ்வில்



2010ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற வடக்கின் வசந்த கலை நிகழ்வில் பங்குபற்றிய மாணவர் குழு



இலங்கையின் புகழ் பெற்ற சிங்கள கலைஞரான சந்தன விக்கிரமசிங்காவுடன் மாணவர்கள்




பௌர்ணமிக் கலைவிழா 01.02.2007

பிரதேச, மாவட்ட, மாகாண கலை இலக்கிய விழாக்களில் மாணவர்கள்












கௌரவ அமைச்சர் ரிசாட்பதியுதீன், அரசாங்க அதிபர் திருமதி.P.S.M.சார்ள்ஸ்
முதலியோரை வரவேற்று கல்லூரி மாணவர்கள் வரவேற்பு நடனம்



கௌரவ் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களை வரவேற்ற போது



கௌரவ பிரதம மந்திரி D.M.ஜெயரட்ண அவர்கள் வவுனியா வருகைதந்த போது
அகிலாண்டேஸ்வர அருளக மாணவர்கள் வரவேற்பு நடனம் வழங்கிய போது



2009ம் ஆண்டு கதிர்காமர் நலன்புரி நிலையத்திற்கு மேன்மைதங்கிய ஜனாதிபதியின் பாரியார்
திருமதி.சிரந்தி ராஜபக்ஷ அவர்கள் வருகை தந்தபோது வரவேற்பு நடனம்

2010 இல் வவுனியா வைத்தியசாலைக்கு நடிகை அசினும் ஜனாதிபதியின் பாரியாரும் வந்த போது வரவேற்பு நடனம் வழங்கியமை.

2010 இல் இடம்பெற்ற வடக்கின் வசந்தம் நிகழ்வில் அதி கூடிய மாணவர்களை அதாவது 40 இற்கும் மேற்பட்ட மாணவர்களை பயிற்றுவித்து “வசந்த நிருத்தியம்” நிகழ்வினை வழங்கியமை.

வவுனியா உக்குளாங்குளச் சிவன் கோவில் திருக்கல்யாண வைபவத்தில் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் நாட்டிய நிகழ்வு வழங்குதல்.

இறம்பைக்குளம் நாகபூசணி அம்மன் கும்பாபிஷேக நிகழ்வில் நாட்டிய நிகழ்வு தோணிக்கல் நாகதம்பிரான் ஆலய உற்சவம் குருமன்காடு காளி கோவில் கும்பாபிஷேகத்தில் நாட்டிய நிகழ்வு, பூந்தோட்டம் நரசிம்மர் கோவிலில் நடன நிகழ்வு, பண்டாரிக்குளம் அம்மன் கோவிலில் நாட்டிய நிகழ்வு, வைரவப்புளியங்குளம் ஆதிவிநாயகர் கோவிலில் பத்து நாள் திருவிழாவிலும் நடன நிகழ்வு, குருமன்காடு பிள்ளையார் கோவிலில் நாட்டிய நிகழ்வு, வேப்பங்குளம் பிள்ளையார் கோவிலில் பத்து நாள் உற்சவத்தின் போதும் நாட்டிய நிகழ்வு, கூமாங்குள அம்மன் கோவிலில் நாட்டிய நிகழ்வு.
கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்தும் கலை விழாவில் ஆண்டு தோறும் நாட்டிய நிகழ்வு வழங்குதல்.

இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம், சுவர்ணவாகினி, சக்தி தொலைக்காட்சி போன்றவற்றில் தொடர்ச்சியாக பல நாட்டிய நிகழ்வை வழங்கியமை.
வவுனியாவில் செலான் வங்கி, CDB வங்கி, LB FINACE, திறப்பு விழாவில் வரவேற்பு நடன நிகழ்வுகளை வழங்கியமை.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த கதிர்காமர், அருணாச்சலம், ஆனந்தக்குமாரசாமி நலன்புரி நிலையங்களில் கலை நிகழ்வுகள் வழங்கியமை.

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் அவரது பாரியார், கௌரவ அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள், கௌரவ பிரதம மந்திரி அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் வவுனியா வந்த, வருகின்ற போதெல்லாம் எமது கல்லூரியே வரவேற்பு நடனம் வழங்கி கௌரவிக்கின்றமை.

வடமாகாண இலக்கிய விழா சாகித்தியவிழா உள்ளூராட்சி விழாக்களில் கலை நிகழ்வுகளில் பங்குபற்றியமை கடந்த வருடம் 2009 இல் யாழ்நகரில் நடைபெற்ற போதும் கூட எமது கல்லூரி மாணவர்கள் கலைநிகழ்வுகளை வழங்கினார்கள். ஒவ்வொரு வருடமும் இந்நிகழ்வில் தொடர்ச்சியாக பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

மடுக்கந்தை கலாச்சார மத்திய நிலையத்தின் ஊடாக இலங்கையில் 61 வது சுதந்திரதின விழாவில் இடம்பெற்ற ஊர்வலத்தில் பங்குபற்றியதோடு கலை நிகழ்வுகளையும் வழங்கியமை.

மடுக்கந்தை கலாச்சார மத்திய நிலையத்தின் ஊடாக ஆதிவாசிகள் வசிக்கின்ற மகியங்கனைப் பகுதியில் நாட்டிய நிகழ்வுகளை வழங்கியமை.

துணுக்காய் பிரதேசத்தில் வடமாகாண புதுவருட கொண்டாட்டத்தில் கலை நிகழ்வுகளை வழங்கியமை.

வடமாகாணத்தால் நடாத்தப்பட்ட கலை விழாவில் கிளிநொச்சியில் கலை நிகழ்வுகளை வழங்கியமை.

வடஇலங்கை சங்கீதசபை நடாத்தும் ஆசிரியர் தர அவைக்காற்றுகை நிகழ்வில் பங்குபற்றி மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் கலாவித்தகர் பட்டம் பெறுதலும், கலை நிகழ்வு அதாவது அவைக்காற்றுகை நிகழ்வு வழங்குதல்.

வவுனியாவில் முதன் முதலாக அரங்கேற்ற நிகழ்வினை நடாத்தி பின்னர் தொடர்ச்சியாக பல அரங்கேற்றங்களைச் செய்தமை.

வவுனியாவில் வள்ளுவர் கலை இலக்கிய விழாவிற்கு கலை நிகழ்வுகளை வழங்கியமை.

தேசிய கல்வி நிறுவனத்தால் 2010 இல் வருடப்பிறப்பு கலைவிழாவில் பாம்பு நடனம், ஒயிலாட்டம் ஆகிய நிகழ்வுகளை வழங்கி சிறப்பித்தமை.

- During the arrival of His Excellency President Mr.Mahinda Rajapakse & his first lady, Hon.Prime Minister and Higher officers to Vavuniya our students gave welcome dance.

- Participate in Nothern provincial Literary festival, Shahithya festival and Urban Council functions.

- Through Madukanda Central Cultural Center participated in 61th Independent day procession.

- Through Madukanda Central Cultural Center gave dance programme with Vedas in Mahiyangane.

- Gave dance programme in Thunukkai division for New Year festival.

- Gave aesthetic programmes in Killinochchi which was hel by Nothern Province.

- Give dance programmes in Rambikulam Nagapoosani Amman temple, Thonikkal Nagathampiran templefestival, Kurumankadu Kali kovil festival, Poonthodda Nachchimarkovil festival, Pandarikula Amman temple, Kurumankadu Pillaiyar kovil, Vairavappuliyankulam Aathivinayagar temple 10 days festival, Veppankula Pillaiyar 10 days festival and Koomankula Amman temple festival.

- Every year our college students participate and receive 'Kala Vithagar' graduation through Nothern Sri Lankan Music Board.

- Deliver Naddya Arangettam continuously in Vavuniya.

- In 2001 gave a dance programme as a represantative of Vavuniya district in the Cultural hall of Matala Pallepola Library .

- Since 2001 during the Annual 10 days temple festival of Vavuniya Kandasamy Kovil. Most probably 250 students participate in this programme.

- In 2002 gave a programme which was conducted by Village Management board of Forut organization.

- On 2nd May 2003 gave dance programmes in 2nd World Hindu Congress.

- In 2003 gave a dance programme in Isurupaya, Battaramulla during Saraswathi pooja festival.

- Since 2004 with Madakanda Central Cultural Center our college students give dance programmeand participate All Island dance competition.

- On 29th July 2005 to remember Veeramani Sir's Rememberance gave dance programme in his house.

- From 2005 to 2008 during Children's day, Women's day and Elder's day which were held by Divisional Secretariat of Vavuniya.

- In 2009 participated in Dance festival which was held in Ramakrishna hall by Shakthi Telecasting Cooperation.

- In 2010 When the actress Asin and the first lady of Sri lanka came to Vavuniya General Hospital we gave a dance festival.

- In 2010 more over 40 students participated in'Vasantha Niruthya' at Uthuru Vasanthaya programme.

- Gave programmes in the Cultural & Literary festival of Valluvar in Vavuniya.

- Gave Snake dance and Oyil dance which is held by the National Institute of Education in the year of 2010.

- Gave aesthetic programmes in the get together of students of Vavuniya campus of University of Jaffna in 2010.

- Gave aesthetic programmes in the Golden jubilee O Suddhananda Young Men Hindu Association.

- Gave dance programme in the opening ceremony of People's Bank branch of Mullaithivu.

## The details of the Aesthetic programmes which were conducted by our college students:

- During the ten days festival which was held in Vavuniya Kandasamy Kovil.
- During the festivals Vavuniya Rambaikulam Nagapoosani Amman temple.
- In 2010 Uththuru Vashanthaya aesthetic programme
- In the 61st Independent Festival of our mother land
- During the Sivarathiri festival of Kovilkulam Ahilandeswarar Temple.
- During the Sivarathiri festival of Veppankulam Pillaiyar Temple.
- Welcome dance during the arrival of the first lady of our country.
- Welcome dance during the arrival of Hon Bazil Rajapakse.



- Dance programme in Thunukkai division for New Year festival which was arranged by the Nothern Provincial Ministry of Education and Cultural Affairs.

- During the Newyear festival gave aesthetic programmes in Kathirgamar IDP Camp.

- During the 10 days festival of Vairavappuliyankulam Athi Vinayakar Temple

- Welcome dance at Seylan bank, CDB bank opening ceremonies.

- Welcome dance at LB Finance opening ceremony.

- Two hundred and tweny students were paricipated in the examination which is held by Nothern Sri Lankan Music Board

- Through Madukanda Central Cultural Centre during the festival of National Dance Programme our college is going to participate in Individual and Group Baratham events.

- Those who won the district leve in 'Narthanam' are going to participate inthe National level competition.

- Participated in Affiliated to the British Federation of Festival of London - 2010 and more than 20 students received gold medal.

- Our college students collected money for the building fund for the Katkuli Nagathampiran temple front elevation.

- When the actress Asin and the first lady of Sri lanka came to Vavuniya General Hospital we gave a dance festival.

- In the opening ceremony of People's Bank branch of Mullaithivu.

- Particiapated in Dacing Super Star competition which is held by Shakthi Telecasting Cooperation.

## Successful Records of the students

## of Niruththiya Nikethana Fine Arts College:

- In the Prize giving of National Youth in 1993, 1994, 1997, 2001, 2004 Our college students won in 1st prize in Group dance, Individual dance and Cultural Village dance. In 2008 MasterMahinthpesan got 1st prize for individual dance in National level. Our college group dance also got the 1st prize.

- During the Children's day in 2004 got 1st prize in Children's group dance in National level.

- The competition among the Central Cultural Centre in National Level Puviyalini Pusparasa got 1st Place in 2008 and Jansi Selvamohan got 1st prize in individual dance, our college got 1st place for group dance in 2009 through Madukanda Central Cultural Centre.

- Our college students won and received 'God Nadaraj' bronze statue in 'Thimithakatha dance competition' which is held by Shakthi Telecasting Cooperation.

- Most of the students from grade 1 to grade 6 passed with first and second grades and our college students passed in the 6th grade of Teachers grade and got 'Kala viththagar' graduation each and every year which is held by Nothern Sri Lankan Music Board.

- Our college student Miss Keshanthini Thanabalasingam got 3rd place in 'Naddiya Mayil' dance competition in 2004.

- Those who got 1st place in All Island Tamil day competition which is held among schools.

- More over hundred students won gold medal in the all island dance competition which is held by Affiliated to the British Federation of Festival of London.

- In 2010 in the District Level competition of Individual competition, Group Baratha, Group village dance competition of Primary group, Junior group, Senior group and Open competition our college students won 1st prize. ( Yet National level competition hasn't been held)

- In 2010 our college students won in 1st prize in Baratha Group dance for girls, Individual dance for boys, Individual dance for girls and Baratha Group dance for boys and girls in the competition among the Central Cultural Centre. ( Yet National level competition hasn't been held)

- Got 2nd place in Group Baratha competition which is held by Nothern Provincial Ministry of Education and Cultural Affairs in 2008.

- In 2009 our college students got 1st place in individual and group dance competitions of Primary, Junior and Senior group for 'Thiruvempa' competition which is held by Vavuniya Divisional Secretariat.



# අප ආ ගමනේ පිය සටහන්.

1994 වර්ෂයේ වවුනියාව රඹකුළමේ රාමසාමි මහතාගේ නිවසේදී ළමුන් පස් දෙනෙකුගෙන් ආරම්භ කළ මෙම ආයතනය 1995-10-21 වන දින ළමුන් 55 දෙනෙකුගෙ සහභාගිත්වයෙන් වවුනියාව නගරසභා ශාලාවේදී මංගල කළා උලළ පවත්වන ලදී. එහි මුලසුන තමිල්මනි අහලංගන් මහතා දරණ ලදී. මෙම කලා උලලේ ඝම්භාවනිය ආරිධිත අමුත්තන් ලෙස හිටපු පාර්ලිමේන්තු මන්ත්‍රි වි. බාලචන්ද්‍රන්, එවකට වවුනියාව දිසාපති කේ. ගනේෂ්, අධ්‍යාපන අධ්‍යක්‍ෂ තුරෙයි තියාගරාජා, හිටපු නගරාධිපති ලිංගනාදන්, ප්‍රාදේශිය ලේකම් ඉමල්ඩා සුකුමාරන් යන මහත්ම මහත්මින් සහභාගි වුහ. එහිදී නිරුත්‍ය නිකේතන කලායතනය යන නම ප්‍රසිද්ධියට පත්කරන ලදී.

එලෙස ආරම්භ කල නිරුත්‍ය නිකේතන කලායතනය ටික කලකදී වේගවත් වර්ධනයක් පෙන්වමින් තාඩිකුළම, රඹකුළම යන ප්‍රදේශවල ශාඛා පවත්වාගෙන යන ලදී. 1996 වර්ෂයේ සිට වවුනියාව හිංදු මාමන්ඩ්‍රම් හි එහි සභාපති සිවනෙරි පුලවර් රාමසාමි මහතාගේ අනුමැතිය ඇතිව එම ස්ථානයේ අප ආයතනයේ පංති පවත්වාගෙන යන ලදී.

අපගේ කලායතනයේ සංවර්ධනයට විශාල පිටුවහලක් දැක්වු එවකට වවුනියාව නගරාධිපති ලිංගනාදන් මහතා සිහිපත් කරනුයේ ඉතා ආඩම්බරයෙනි. එතුමන්ගේ සංකල්පයක් වු සෑම පසෝලොස්වක පෝය දිනකම වවුනියාව නගර සභා ශාලාවේදී පැවැත්වු කලා උලලෙයන්හිදී අපගේ කලායතනයේ ළමුන්ගේ දක්‍ෂතා වේදිකා ගත කිරීමට අවස්ථාව ලැබුනි. 1994 වර්ෂයේ සිට වවුනියාව හිංදු තරුණ සංගමය පවත්වන සරස්වති පුජා කලා උලළෙ සඳහා අප ආයතනයේ ළමුන්ගේ නිර්මාණ මේ දක්වා ඉදිරිපත් කරනු ලැබේ. 2002 වර්ෂයේ සිට හිංදු තරුණ සංගමයේ ගොඩනැගිල්ලේද අප ආයතනයේ පංති ආරම්භ කරන ලදී. නිරුත්‍ය නිකේතන කලායතනයේ පිබිදිමට හිංදු මාමන්ඩ්‍රම් හා හිංදු තරුණ සංගමය දැක්වු අනුග්‍රාහය සිහිපත් කරනුයේ ඉතාමත් ගෞරවයෙනි.

1993 වර්ෂයේ සිට රූපවාහිණී සංස්ථාවේ වැඩසටහන් සඳහා අප ළමුන්ගේ නිර්මාණ ඉදිරිපත් කිරීමට අවස්ථාව ලැබුනි. එන්.එස්. විශ්වනාදන් හා එන්.එම්. රාජා යන මහත්වරුන්ගේ මඟ පෙන්විම යටතේ රූපවාහිණී සංස්ථාවේ වැඩ සටහන් වලට ඉදිරිපත් විමට ලැබීම වෙනුවෙන් එතුමන්ලාට අපගේ ස්තුතිය පිරිනමන්නේ ඉතාමත් සතුටින්ය.

නිරුත්‍ය නිකේතන කලායතනයේ මුද්‍රා නාට්‍ය හා නැටුම් සඳහා ගිත නිර්මාණය කරමින් එම සිලුම නර්තනාංග අධික්‍ෂණය කරමින් මඟ පෙන්වමින් අප යන ගමනේ ජයග්‍රහණය සඳහා විශාල අනුග්‍රහයක් ලබා දෙන්නේ තමිල්මනි අහලංගම් කලා කරුවානන්ය. අප ආයතනය ආරම්භයේ සිට වර්තමානය දක්වාම අනුශාසකත්වය ලබා දෙමින් එතුමන් කරන සේවය අගය කරමි. අප ආයතනය ආරම්භයේ සිට මේ දක්වා ලංකාවේ විවිධ ප්‍රදේශ වල අප කලායතනයේ ළමුන්ගේ දක්‍ෂතා එළිදක්වා තිබේ.

ශිෂ්‍ය සංඛ්‍යාවේ වර්ධනයත් සමගම අමතර ගුරුවරු බඳවා ගැනිම ට කටයුතු කළ අතර ආරම්භක ගුරුවරුන් වශයෙන් 1998 වර්ෂයේදී සිවසෝදි මෙනවිය හා සුජිතා මෙනවිය නැටුම්

ගුරුවරුන් ලෙස අප කලායතනයට එක් වුහ. අප කලායතනයේ ළමුන් සෑම වසරකදීම උත්තර ලංකා සංගීත සභාවේ පරීක්‍ෂණ සඳහා ඉදිරිපත් වී සාමාර්ථ ලබයි. තරුණසේවා සභාවේ තරග වලදීද සෑම වසරකදීම සමස්ත ලංකා මට්ටමේ ජයග්‍රහන ලබයි.

කලායතනය හා සම්බන්ධව ආරම්භකාලයේ සිටම වාද්‍ය ශිල්පීන් වශයෙන් මෘදංගම් වාද්‍ය ශිල්පී කේ. කනගේස්වරම්, වයලින් වාද්‍ය ශිල්පිණී විමලලෝජිනි කනගෙස්වරි යන කලා කරුවන් හැඳින්විය හැකිය. ගායන ශිල්පීන් වශයෙන් ආරම්භක අවධියේ වසන්ති කන්නන් කටයුතු කළ අතර වර්තමානයේදී දේවි මනෝහරි උමා මහේස්වරි කිර්තනා කමලදාස් වදනි ශ්‍රී දරන් යන සංගීත ශිල්පීන් කටයුතු කරයි. එමෙන්ම සංගීත නිර්මාණ කටයුතු වලදී කන්දප්පු ජයන්දන් කටයුතු කරයි.

ඉතිහාසයේ ප්‍රථමවරට වවුනියාව දිස්ත්‍රික්කයේ භරත නැටුම් අරන්ගේත්‍රම් කළ එලි දැක්මක් පැවැත්වුයේ අප කලායතනය මගින්ය. 1996 වර්ෂයේ ප්‍රදීපා රාමසාමි දැරියගේ භරත නැටුම් අරන්ගේත්‍රම් කළ එළි දැක්ම වේදිකා ගත විය. වර්තමානයේදී ඇය වෛද්‍ය උපාධිය හදාරන ශිෂ්‍යාවකි. 2003 වර්ෂයේ අප කලායතනය ව/නිරුත්‍ය නිකේතන සෞන්දර්ය විද්‍යාලය නමින් උතුරු නැගෙනහිර පළාත් සංස්කෘතික අමාත්‍යාංශයේ ලියාපදිංචි කරන ලදි.

විද්‍යාලිය සංවර්ධනයත් සමග පරිපාලනය විධිමත් කරමින් විද්‍යාලයේ ඉගෙනුම ලබන ළමුන්ගේ දෙමාපියන්ගේ මහ සභා රැස්විමකදී තොරාගත් කළමණාකරන කමිටුවක් මගින් පරිපාලන තිරණ ගැනිමේ ව්‍යුහය ස්ථාපිත කරන ලදි. දැනට විද්‍යාලිය ශාඛා කෝවිල් පුදුකුළම, වවුනියා නගරය, නෙළුක්කුළම, වෙප්පන්කුළම් යන ප්‍රදේශ වල ක්‍රියාත්මක වේ. නෙළුක්කුළම හා වෙප්පන්කුළම ශාඛාවන් හි භාරකාරත්වය දරන්නේ විද්‍යාලිය ගුරුවරයෙකු වන ඒ. සුජේන්ද්‍රා මහතාය.

දැනට අප විද්‍යාලයේ භරත නැටුම්, කර්ණාටක සංගිතය, මෘදංග වාදනය හැදැරීමේ ඉඩ ප්‍රස්ථා ළමුන්ට ඇති අතර ළමුන් 500 ට අධික සංඛ්‍යාවක් විද්‍යාලයේ ඉගෙනුම ලබති. ගුරුවරුන් වශයෙන් වර්තමාණයේ කටයුතු කරනු ලබන්නේ ජී. බාමිණි ඒ. සුජේන්ද්‍රා, එම්. සුදර්ෂණි, එස්. ජාන්සි, එස්. දිව්‍යමදි යන ගුරුවරුන්ය. මේ සියලු දෙනා මෙම විද්‍යාලයේ ඉගෙනුම ලැබූ ආදි ශිෂ්‍යයන් වේ. ජ්‍යෙෂ්ඨ ශිෂ්‍යයන් කණිෂ්ඨ ශිෂ්‍යයන්ට ඉගැන්විමේ ශිල්ප ක්‍රමය අප විද්‍යාලයේ සංස්කෘතියේ කොටසකි.

2008 වර්ෂයේදී අප සෞන්දර්ය විද්‍යාලය  ඉන්දියාවේ කාලෙයිකාවෙරි සෞන්දර්ය විශ්ව විද්‍යාලය සමග අනුගත වෙමින් භරත නැටුම් ඩිප්ලෝමා හා උපාධි පාඨමාලා මෙහි සිට හැදැරීමේ අවස්ථාව ළමුන්ට ලබා දී ඇත. අද වන විට නිරුත්‍ය නිකේතන සෞන්දර්ය විද්‍යාලය සෞන්දර්ය අංශයෙන් උපාධිධාරීන් බිහි කරන ආයතනයක් බවට සංවර්ධනය වී තිබේ.



# විද්‍යාලයේ අවශ්‍යතා.

වන්නි ප්‍රදේශයේ වසර 16 ක ඉතා කටුක අත්දැකීම් ලබමින් කලාවේ උන්නතිය සඳහා කටයුතු කළ අප සෞන්දර්ය විද්‍යාලය පෝෂණය වුයේ බාහිර සමාජයේ හෝ රජයේ පූර්ණ අනුග්‍රහය ඇතිව නොවේ. ඉතා සීමිත සම්පත් ප්‍රමාණයකින් උපරිම කාර්යක්ෂමතාවයක් ලබා ගනිමින් අප ආයතනය ගොඩ නැගුවෙමු. සෞන්දර්ය විද්‍යාලයක් වශයෙන් ළමුන් 500 කට අධික සංඛ්‍යාවක් සමග විද්‍යාලය පවත්වාගෙන යනු ලබන්නේ අපේම ගොඩනැගිල්ලක නොවේ. හිංදු මාමන්ඩුම් හා හිංදු තරුණ සංගමය යන ආයතන වල පංති පවත්වාගෙන යනු ලබයි. ප්‍රධාන කාර්යාලය පවත්වාගෙන යනු ලබන්නේ කොවිල් පුදුකුළමේ පිහිටි විද්‍යාලයේ විදුහල්පතිනි වි. සුරියයාලනි මහත්මියගේ පෞද්ගලික නිවසේදිය. අනෙකුත් ශාඛාද පෞද්ගලික ගොඩනැගිලිවල පවත්වාගෙන යනු ලබයි. අප විද්‍යාලයේ අනාගතය සඳහා මූලික අවශ්‍යතාවයන් කිපයක් සපුරාගත යුතුව ඇත. එනම්,

- අප විද්‍යාලය සඳහා ඉඩමක් ලබා ගැනීම
- එම ඉඩමේ ස්ථිර රංග ශාලාවක් ඉදිකර ගැනිම
- විද්‍යාලය සඳහා අවශ්‍ය සංගිත උපකරණ ලබා ගැනිම
- ගෘහ භාණ්ඩ ලබා ගැනිම

ඉහත සඳහන් අවශ්‍යතා ප්‍රමුඛතාවය මත පෙළගස්වා ඇති අතර එකිනෙක සම්පූර්ණ කර ගැනිමේදි රජයේ ආයතන, සමාජ සේවා ආයතන, ස්වෙච්ජා සංවිධාන, පෞද්ගලික ව්‍යාපාර ආයතන හා දානපතියන්ගේ උපකාර අප විද්‍යාලය අපේක්ෂා කරමු. මෙම විද්‍යාලයේ උන්නතිය සඳහා ප්‍රදේශයේ කලාවට ලැදි සියලුදෙනාගේ සහයෝගය හා අනුග්‍රහය අපි අපේක්ෂා කරන්නේ ඉතා ගෞරවයෙන්ය. යාපනයේ විපුලානන්ද සෞන්දර්ය ආයතනය පසු කලකදි යාපනයේ විශ්ව විද්‍යාලයට අනුබද්ධ සෞන්දර්ය විශ්ව විද්‍යාලයක් බවට පත්වී ඇත. එලෙසම නිරුත්‍ය නිකේතන සෞන්දර්ය විද්‍යාලය ද විශ්ව විද්‍යාලයක් බවට පත්කර ගැනිම අපගේ මූලික අරමුණ වේ. ඒ සඳහා වන්නි ප්‍රදේශයේ බුද්ධිමතුන්, අධ්‍යාපන නිළධාරීන්, රජයේ උසස් නිළධාරීන්, සමාජ ප්‍රභුවරුන් හා කලා කරුවන් මෙන්ම දේශපාලන අධිකාරියේ සහයෝගයද අපේක්ෂා කරමු.

# අප විද්‍යාලයේ රංගන ශිල්පින් ඉදිරිපත් කළ රංගන ප්‍රසංගයන් හා නර්තන නිර්මාණ කිපයක්.

- 1992 සිට 1998 දක්වා වවුනියාව නගරසභාව මාසිකව සංවිධානය කළ පෞර්ණමි කලෙයිවිලා උලෙළට අබන්ඩව නර්තන අංග ඉදිරිපත් කිරිම.
- 1994 සිට මේ දක්වා වවුනියාව ප්‍රාදේශිය ලේකම් කාර්යාලය හා කච්චේරිය මගින් පවත්වනු ලබන සාහිත්‍ය උත්සව, සංස්කෘතික උත්සව, සරස්වති පුජා හා නර්තන තරග වලට ළමුන්ගේ නිර්මාණ ඉදිරිපත් කිරිම.
- වවුනියාව පුස්තකාල වාර්ෂික සැමරුම් වලදී ළමුන්ගේ නර්තන සංදර්ශන ඉදිරිපත් කිරිම.
- වවුනියාව සුද්දානන්ද තරුණ හිංදු සංගමයේ හා හිංදු මාමන්ඩ්‍රම් සංගමයේ වාර්ෂික සරස්වති පුජා උත්සව වලදී පුජා නර්තන ඉදිරිපත් කිරිම.
- දෙවන වරට පැවැත්වු ලෝක හිංදු ආගමික සමුළුවේදී විද්‍යාලිය ළමුන්ගේ නර්තන නිර්මාණ වේදිකා ගත කිරිම.
- 2003 වර්ෂයේ අධ්‍යාපන අමාත්‍යාංශයේ පැවති සරස්වති පුජා උත්සවයේදී නර්තන සංදර්ශනයක් ඉදිරිපත් කිරිම.
- 2005 වසරේ විරමනි අයියර් ගුණානුස්මරණ උලෙළ සඳහා නර්තන නිර්මාණ ඉදිරිපත් කිරිම.
- 2005 වර්ෂයේ කොවිල්කුළම අහිලාන්ඩේස්වරි ළමා නිවාසයේ ළමුන් හා එකාබද්ධව කලා උලෙළක් පැවැත්විම.
- පහත සඳහන් කොවිල්වල වාර්ෂික තිරුවිලා උත්සව වලදී අබණ්ඩව දේව පුජා නර්තනාංග ඉදිරිපත් කිරිම.

කොවිල්කුළම ඊශ්වරන් කෝවිල
රඹකුළම නාග කෝවිල
වවුනියාව නගරයේ මුරුගන් කෝවිල
තොනිකල් නාග කෝවිල
පුන්තෝට්ටම් නරසිංහ කෝවිල
වෛරව පුලියන්කුළම අම්මන් කෝවිල



කුරුමන්කාඩු ආදිවිනයාගර් කෝවිල

වේප්පන්කුළම අම්මන් කෝවිල

කුමාන්කුළම අම්මන් කෝවිල

- කලා හා සංස්කෘතික මිතුරන්ගේ හවුල් සංවිධානයේ වාර්ෂික සමුළුවලදී නර්තන නිර්මාණ එළි දැක්වීම.
- වවුනියාව මහ රෝහල , වාරිමාර්ග දෙපාර්තමේන්තුව වැනි රාජ්‍ය ආයතන වල සංවිධානය කළ උත්සව වලදී නර්තනාංග ඉදිරිපත් කිරිම.
- මුලතිවු මහජන බැංකුව, වවුනියාව සෙලාන් බැංකුව, C D B බැංකුව, L B ෆිනෑන්ස් වැනි ආයතන විවෘත කිරීමේ උත්සව වලදී නර්තනාංග ඉදිරිපත් කිරිම.
- උතුරු පළාත් සංස්කෘතික අමාත්‍යාංශය සංවිධානය කරන සංස්කෘතික හා කලා උත්සව වලදී ළමුන්ගේ නිර්මාණ ඉදිරිපත් කිරිම.
- ජාතික අධ්‍යාපන ආයතනයේ පැවති උත්සව වලට නර්තන කන්ඩායම් ඉදිරිපත් කිරිම.
- රූපවාහිණී සංස්ථාව, ස්වාධීන රූපවාහිණී, ස්වර්ණවාහිණී, ශක්ති වැනි රූපවාහිණී නාලිකා වලින් විකාශනය වු විවිධ වැඩසටහන් වලට ළමුන්ගේ නර්තන නිර්මාණ ඉදිරිපත් කිරීම.
- උතුරු වසන්තය ව්‍යාපෘතිය යටතේ බණ්ඩාරනායක සම්මන්ත්‍රනශාලාවේදී පැවති කලා උලෙළෙදී අප විද්‍යාලයේ නර්තන කණ්ඩායම් වල නිර්මාණ වේදිකා ගත කිරීම.

# විද්‍යාලයේ අධ්‍යාපනික ක්‍රියාකාරකම් වලින් කිපයක්.....................!

- උත්තර ලංකා සංගීත සභාව පවත්වනු ලබන වාර්ශික පරික්‍ෂණ වලට ළමුන් ඉදිරිපත් කරමින් එම විභාග ජලින් සමත් කරවීම.
- නර්තන විෂයට අදාල සම්මන්ත්‍රන පැවැත්විම
- වවුනියාවේ පළමු භරත නැටුම් අරන්ගේට්ට්‍රම් කළ එළි දැක්මපැවැත්විම හා එවැනි කළ එළි දැක්විම් කිපයක් වේදිකා ගත කර තිබේ.
- වාර්ෂිකව පැවැත්වෙන විද්‍යාලීය මට්ටමේ වාර්ෂික කලා උලළෙදි සෑම ශිෂ්‍යයෙක්ම වේදිකා තග කිරිම.
- විවිධ තරග සඳහා ළමුන් ඉදිරිපත් කරමින් සමස්ත ලංකා මට්ටමේ ජයග්‍රහණ ලබා ගැනිම
- දක්ෂතා ඇති ආර්ථික දුෂ්කරතා වලින් පෙළෙන දරුවන්ට නොමිලේ ශිල්ප හැදෑරීමට අවස්ථාව ලබා දිම.
- විවිධ සංකෘතික උත්සව වලදි ළමුන්ගේ නිර්මාණ ඉදිරිපත් කරමින් ඔවුන්ගේ දක්‍ෂතා ජාතික තලයට රැගෙන ඒම.
- ඉන්දියාවේ කලෙයිකාවේරි විශ්ව විද්‍යාලය සමග අනුයුක්ත වී උපාධි පාඨමාලා අප විද්‍යාලයේදිම ඉගෙනිමට ඉඩ ප්‍රස්තාව ලබා දිම.
- ආගමික හා සංස්කෘතික පුණර්ජිවය සඳහා සමාජයේ අනෙකුත් ආයතන සමග ඒකාබද්ධව කලාවේ උන්නතියට විද්‍යාලය කැපවිම.
- රූපවාහිණි වැඩසටහන් වලට ළමුන් ඉදිරිපත් කිරිම.
- කලාවට හා රසවින්දනයට ලැදි සමාජයක් බිහි කිරිමේ අරමුණින් විද්‍යාලයේ ඉගෙනුම ලබන දෙමාපියන් දැනුවත් කරමින් ඔවුන්ගේ සහයෝගය ආයතනයේ කටයුතු වලට දායක කර ගැනිම.



# ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு அழகியலின் அவசியம்

கல்வியின் பரந்த நோக்கம் தனித்துவ ஆற்றல் சமமாக அபிவிருத்தியடைதல் என்ற உளவல்லுனர்களின் விளக்கத்தின் படி கற்றல் சமமாக அபிவிருத்தி அடைய தனி மனித அறிவு மனவெழுச்சி உள இயக்கம் ஆகிய பரப்புக்களில் பூரணத்துவம் ஏற்பட வேண்டும். அழகியல் கல்வி என்ற பாடப்பரப்பின் மூலமாக சிறப்பான ஆளுமை அபிவிருத்திக்குத் தேவையான நோக்கங்கள் நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

இயற்கையிலும் செயற்கையிலும் உள்ள அழகினைக் கண்டு களிப்பதற்கு அழகியற் கல்வி மாணவர்களை தூண்டுகின்றது. காணல், கேட்டல் ஆகிய செயற்பாடுகளினால் உளத்தொழிற்பாட்டில் திருப்தி ஏற்படுகின்றது. இயற்கையை இரசித்தல் மூலமாக இன்ப உணர்ச்சியை ரசனையை மனிதன் பெறுகின்றான். இரசனை அனுபவம் மூலம் மாணவர்களிடையே அறிவுத்திறனை விருத்தி செய்யமுடியும்.

நல்லதொரு இரசனை அனுபவத்தைப் பெற்ற மனிதன் கடமைகளை மதிப்பவனாகவும் சமாதானப் பிரியனாகவும் மனக் குழப்பம் அற்றவனாகவும் அறிவு வளர்ச்சி பெற்ற நற் பண்புகளைக் கொண்டிருப்பான்.

நல்ல அழகியல் இரசனை இல்லாத மனிதன் இயந்திர இராட்சத மிருகமாகி மனிதாபிமானம் அற்றவனாகவே வாழ்வான். அவனது வாழ்க்கை அச்சாணி இல்லாத வண்டி குடை சாய்வது போல் சாய்ந்து விடும்.

எனவே மாணவர்களிடையே அழகியல் இரசனையை அனுபவத்தைத் தூண்ட ஆசிரியர்கள் முன்வரவேண்டும். மாணவனை இரசிக்கத் தூண்டும் ஆசிரியன் இரசிகனாக இருக்க வேண்டும். அப்போதுதான் அறிவுத்திறன் மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்ய முடியும். அழகியல் இரசனையை மாணவர்களிடையே ஏற்படுத்த பின்வரும் வழிமுறைகளை ஆசிரியர் கையாளலாம்.

01. பாடசாலை, வகுப்பறை என்பவற்றை கவர்ச்சிகரமாக்கல்.
02. வகுப்பறையில் அழகிய சித்திரங்களைத் தொங்கவிடல்.
03. பலவகை அபிநயப் பாடல்கள் நாட்டியம் மூலம் இரசனையை ஏற்படுத்தல்.
04. நடையுடை பாவனை, பேச்சாற்றல் உள்ளத்தைக் கவருதல்.
05. மிருகங்கள், பறவைகள் இயற்கை அசைவுகள் போன்றவற்றைச் செய்துகாட்டி அதே போல் பாவனை செய்யவிடல்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் உளச் சமநிலையைப் பேணுவதற்கு இத்தகைய செயற்பாடுகள் முக்கியமாகும். பிள்ளையின் கேட்டல் செயற்பாட்டை விருத்தி செய்ய பாடல்கள் உதவுகின்றன. பார்த்தல் செயற்பாட்டை விருத்தி செய்ய அபிநயம் உதவுகின்றது. அசைவு சார் நடவடிக்கைகள் மூலம் கல்விசார் நடத்தைகளை மேற் கொள்ள வேண்டும்.

01. உடலியக்க நர்த்தன அசைவு:- துள்ளல், குதித்தல், நடத்தல், பாய்தல், சுற்றுதல்.

02. உளவெளிப்பாட்டு நர்த்தன அசைவு:- தான் கண்டதை அவதானித்ததை ஆய்வு செய்து ஆக்கமாகச் செய்தல்.

மேற் கூறப்பட்ட அசைவுகள் மூலம் மாணவர்களிடையே பின்வரும் பயன்பாடுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

01. குழுச் செயற்பாட்டை அதிகரிக்கலாம்.
02. தாளத்திற்குக் கட்டுப்படுவதால் மாணவர்களிடையே தன்னடக்கக் கட்டுப்பாடு வளரும்.
03. தசை வளர்ச்சி, நரம்பு, கை, கால் உறுதியாக்கப்பட்டுத் திடமாக வளரப் பெறுகின்றது.
04. சுறுசுறுப்பாக, விரைவாக இயக்கும் தன்மை ஏற்படும்.

பாரதியாரின் கல்விச் சிந்தனை அழகியல் சிந்தனையாகவே காணப்படுகின்றது. அதாவது.

“ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கல் ஆகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - நீ
ஒரு குழந்தையை வையாதே பாப்பா
காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்றும்
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா

என்று பாரதியார் பாடுகின்றார்.

உயிர்களிடத்தில் அன்பு காட்ட வேண்டும், பொய் சொல்லக் கூடாது, நன்றாகப் படிக்க வேண்டும் போன்ற அறக்கருத்துக்கள், சமூகக் கருத்துக்கள், மொழிப்பற்று என்பன அழகியல் பாடங்களோடு கற்பிக்கப்பட வேண்டும் என்பதே பாரதியாரின் சிந்தனை ஆகும்.

அது போலவே தேசிய விநாயகம் பிள்ளையும் அழகியல் சிந்தனையை மாணவர்களிடையே வலியுறுத்துகின்றார். அவர் “ஒரு முறை ஒரு குறிப்பிட்ட இசை மொழியில் ஈடுபட்டு இன்புறும் குழந்தையின் உள்ளம் மீண்டும் அந்த இசையை நாடிச் செல்லும்” என்று வலியுறுத்துகின்றார்.

அடுத்து அழவள்ளியப்பா குழந்தைகளுக்கான கற்பித்தலில் “இசையும் அசைவும்” என்ற உடல்வள இயக்கத் தேவைப் பாட்டினை முன் மொழிகின்றார். காட்சி நிலையிலிருந்து கருத்து நிலைக்கு மாணவர்களைக் கொண்டு செல்ல வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

சோம சுந்தரப் புலவர் “சிறார்களின் சிந்தனையில் அன்பு ஊடுருவியிருத்தல் வேண்டும்” என்கிறார். அவர் தாம் கற்பித்த பாடசாலையை கலையரசியாக உருவகம் செய்தவர். நகைச்சுவைப் பாடல்கள் மூலம் சிறார்களைக் கவர்ந்தவர்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே பதகளித்தல், பொறாமை, வன்செயல் என்பன அதிகரிக்கும். இவற்றைக் கட்டுப்படுத்த ஆடல் பாடல்கள் மிகவும் அவசியம். மாணவர்களின் மொழி வெளிப்பாடு, இயக்கத் திறன்கள், உளத் திறன்கள், சமூகமயமாதல் போன்றவற்றிற்கு அழகியல் அசைவுகள் முக்கியமானவை ஆகும்.

# நாட்டியக் கலையின் பெருமை

சமய தத்துவங்களையும் கருத்துக்களையும் புலப்படுத்தி மனித குலத்தை ஆன்மீக நெறியில் செலுத்துவதற்கு உகந்ததோர் கலைவடிவமாக உருவாக்கப்பட்டதே நாட்டியக் கலையாகும். மலர், தீப, தூப ஆகிய எல்லா விதமான உபசாரங்களுள்ளும் நிருத்தியோபசாரத்தையே ஆண்டவன் பெரிதும் விரும்புகின்றான். இப்படிப்பட்ட புனிதமான நாட்டியக் கலையைப் பார்த்தல் மூலமாக ஒருவருக்கு நற்கீர்த்தி, முதிர்ந்த அனுபவம், சாதுர்யம், அழகு ஆகிய நான்கும் அதிகரிக்கின்றன.

நாட்டியத்தைப் பயில்பவர்களும் காண்பவர்களும் பரலோகம் என்கின்ற சொர்க்க லோகத்தினைப் பூலோகத்திலேயே அடைகின்றார்கள். ஒரு குழந்தையைக் கையில் எடுத்துக் கொஞ்சி மகிழும்போது ஏற்படுகின்ற பேரானந்தத்தைவிட நாட்டியத்தைக் கண்ணுறும் போது அடைகின்ற ஆனந்தம் அதைவிட இரு மடங்காகும். அதனாலேயே காரைக்கால் அம்மையாரிடம் இறைவன் "அம்மையே என்னவரம் வேண்டும்." என்று இறைவன் கேட்டபோது "அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க வேண்டும்." என்கின்றார்.

விஞ்ஞான ரீதியாகவும், மெய்ஞ்ஞான ரீதியாகவும் இக்கலை பற்றி எடுத்து நோக்கினால் அக் கலையைப் பயில்வதனால் உடலும் உளமும் ஆரோக்கியம் அடைகிறது. விஞ்ஞான ரீதியாக மருத்துவ முறையில் எடுத்து நோக்கும்போது நாட்டியக் கலையில் உருவாக்கப்பட்ட அடவுகள் அனைத்தும் ஒவ்வொரு நோய் தீர்க்கும் மருந்துகளாகக் காணப்படுகின்றன.

தட்டடவுகளைச் செய்யும் போது பாரிசவாதம், பித்தவெடிப்பு, நரம்புச் சுற்று போன்ற நோய்கள் வராமல் தடுக்கப்பட்டு கால் எலும்புகள் பலப்படுத்தப்பட்டு தொடையில் ஏற்படும் ஊளைச் சதைகள் அகற்றப்படுகின்றன.

அதேபோல் நாட்டடவு, குதித்து மெட்டடவு போன்ற அசைந்து ஓடி ஆடும் அடவுகளைச் செய்யும் போது சுவாசச் சுற்றோட்டத் தொகுதியில் ஏற்படும் பலவிதமான நோய்கள் அகற்றப்படுகின்றன. குனிந்து நிமிர்ந்து தலையை அசைத்து ஆடும் போது தலைக்கு இரத்தோட்டம் செல்கின்றது. விரைவாக ஆடும் போது சுவாசத் தொகுதி வேகமாகச் செயற்படுகின்றது. இதனால் சுவாசப் பகுதியில் படியும் கொழுப்புகள் அகற்றப்படுவதோடு மாரடைப்பு, ஆஸ்மா போன்ற நோய்கள் வராமல் தடுக்கப்படுகின்றது.

இவற்றைவிட சிறு நீரகத்தில் படியும் உப்புக்கள் எல்லாம் வெளியேற்றப்படுகிறது. இதனைவிட உடலில் உள்ள கழிவுகள் அனைத்தும் வியர்வையாக வெளியேற்றப்படுகிறது. உடலில் காணப்படும் தேவையற்ற ஊளைச் சதைகளை இல்லாமற் செய்கின்றது. இன்று மருத்துவ உலகில் இக்கலையின் அடிப்படையில் சுவாசம், நரம்பு சம்பந்தப்பட்ட எத்தனையோ நோய்கள் குணமாக்கப்படுகின்றன. சிரங்கு, எக்சிமா, இரத்த உயர் அழுத்த வியாதி என்பன இதைப் பயில்பவர்களிடையே காணப்படமாட்டாது. இதைவிட முக வசீகரம், உடல் அழகு, சுறுசுறுப்பு, எதையும் இன்முகத்துடன் செய்யும் தன்மை போன்றனவும் ஏற்படும்.

மெய்ஞ்ஞான ரீதியாக நோக்கும் போது நாட்டியக் கலை சமயத்தோடு பின்னிப் பிணைந்து வளர்ந்த கலையாகும். அன்பு, பக்தி, சாந்தம், போன்ற நற் குணப் பண்புகள் உள்ளத்திலே ஏற்படுகின்றது. குரோதம், கோபம், பொறாமை போன்ற கொடுமையான எண்ணங்கள் அகற்றப்பட்டு மென்மையான உணர்வுகள் மனதிலே தோற்றம் பெறுகின்றது. உள்ளம் தூய்மைப்படுத்தப்பட்டு மனஅமைதி பிறக்கின்றது.

பக்தி நெறியில் இந்து சமய அனுட்டானங்களில் மனம் செலுத்தப்படும். இதனால் உள்ளத்திலே எந்நேரமும் ஒரு புத்துணர்ச்சி காணப்படும். இவற்றைவிட மனக் கட்டுப்பாடு எதையும் துணிவுடன் செய்யும் ஆற்றல், சிறந்த ஒழுக்கம், பெரியவர்களை மதிக்கும் தன்மை, வெற்றி தோல்வியை ஏற்கும் மனப்பாண்மை போன்ற சிறந்த ஆளுமைப் பண்புகள் இக்கலையைப் பயிலும் போது ஏற்படும்.

மேலே குறிப்பிடப்பட்டவை அனைத்தையும் உற்று நோக்கும் போது நாட்டியக் கலை ஒரு சிறந்த உன்னதமான கலையாக கருதப்படுகின்றது.

இக்கலையைப் பயில்வதனால் உடலும் உள்ளமும் தூய்மைப்படுத்தப்படுகின்றது. இக்கலை ஒரு சிறந்த உடற் பயிற்சியாகவும் உளப் பயிற்சியாகவும் அமைவதோடு பக்தி சார்ந்த ஆன்மீகத்தை வளர்க்கும் கலையாகவும் காணப்படுகின்றது.

# நடன ஆசிரியருக்கு இருக்க வேண்டிய பண்புகள்

எந்த ஆசிரியரும் நல்லாசிரியராகவே மாணவர்களிடம் இருத்தல் வேண்டும். ஆசிரியர் மேல் மாணவர்கள் பிரியம் வைத்தாலே அந்தப் பாடத்தில் ஆர்வம் காட்டுவார்கள். எனவே எந்த ஆசிரியரும் முதலில் மாணவச் செல்வங்களின் மனதில் இடம் பிடித்தல் வேண்டும். இதற்கு ஒரு ஆசிரியரின் நற்பண்புகளும் கற்பித்தல் அணுகு முறைகளுமே மாணவர்களைக் கவருகின்றது. இதன் அடிப்படையில் ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டிய ஒரு சில நற்பண்புகளை நோக்குவோம்.

01. ஒரு ஆசிரியர் எந்தக் குழந்தையிடமும் மிகவும் அன்பாகவும் ஆதரவாகவும் நடத்தல் வேண்டும்.

02. மாணவச் செல்வங்களின் மனம் நோகும்படி நடத்தல் கூடாது, கடும் வார்த்தைகளை பிரயோகிக்கக் கூடாது, கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்க வேண்டும். அதற்காக மிகக் கடுமையான விதத்தில் கண்டித்தல் அதாவது மனம் நோகும்படி பேசுதல் கூடாது.

03. கற்பிக்கும் பொழுது செய்முறைக் கற்பித்தலில் எல்லாக் குழந்தைகளும் உடனே செய்ய மாட்டார்கள்.அப்போது மிகவும் ஆறுதலாகவும் கோபம் கொள்ளாமலும் கற்பிக்க வேண்டும். அதற்குப் பதிலாக "உனக்கு வராது, வேறு பாடம் பார், செய்யத் தெரியாது" என்ற வார்த்தைகளை பிரயோகிக்கக் கூடாது. மிகவும் பொறுமையாகக் கற்பிக்க வேண்டும்.

04. சில குழந்தைகள் நடனம் ஆடுவதற்குரிய உடலுர அமைப்பை ஒத்திருக்க மாட்டார்கள். அவர்களைப் பார்த்து இகழ்ச்சியாக உருவ அமைப்பை இகழக் கூடாது. அவர்களையும் அனுசரித்து அன்பாகக் கற்பிக்க வேண்டும்.

05. முகம் பார்த்து, வசதி பார்த்து மாணவர்களிற்குக் கற்பிக்கக் கூடாது. வகுப்பறையில் சகல மாணவர்களையும் ஒரே பார்வையில் நோக்குதல் வேண்டும்.

06. மாணவர் விடும் தவறுகளைப் பெரிது படுத்தக் கூடாது. அதனை அன்பாக எடுத்துக் காட்டிப் புத்தி கூறி வழி நடாத்துதல் வேண்டும்.

07. பொறுமை, சாந்தம், அன்பு, அடக்கம், பணிவு என்பவற்றிற்கு உதாரணமாகத் திகழ வேண்டும்.

08. எவ்விதப் பிரச்சினைகளுக்கு இடையிலும் மாணவச் செல்வங்களோடு முக மலர்ச்சியாகவும் சந்தோசமாகவும் கற்பித்தல் மேற்கொள்ள வேண்டும்.

09. நடன ஆசிரியரானவர் எவ்வித சலிப்புமில்லாது முழு மனதுடன் வகுப்பறையில் சகல அடவுகளையும், உருப்படிகளையும் மாணவருக்கு ஆடிக் காட்டுதல் வேண்டும். இருந்தபடி கற்பித்தல் என்பதுநடன பாடத்திற்குப் பொருத்தமற்றது. நின்றபடி கற்பித்தலில் ஈடுபடவேண்டும்.

10. மாணவருக்குக் கற்பிக்கும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஆசிரியர் செயற்பட வேண்டும். ஒரு மாணவருக்குத் தோழியாகவும், தாயாகவும், குழந்தையாகவும், குருவாகவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்பச் செயற்பட வேண்டும். அப்போதுதான் மாணவர்களைப் புரிந்து கற்பிக்க முடியும். அவர்களது தேவைகளை அறிந்து பூர்த்தி செய்து நல்வழிப்படுத்தலாம்.

## மாணவர்களிடையே தாளப் பிடிப்பை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள்

நாட்டியத்தின் உயர் நிலையாக அமைந்தது தாளம். சுருதியை மாதா என்றும், லயத்தைப் பிதா என்றும் கூறுவார்கள். குடும்பத்தில் தந்தை இல்லாவிடின் குடும்ப நிலை என்னவாகும். அதே போலவே பரதம் என்ற குடும்பத்தில் தந்தையாக விளங்குவது தாளமாகும். ஆசிரியரின் தாளக் கட்டுப்பாட்டிற்குள்ளேயே நர்த்தகியானவள் கட்டுண்டு ஆடப் பழகுகின்றாள். தாளம் தப்பினால் அந்த நடனத்தைப் பார்க்கவே முடியாது. எனவே ஆரம்பத்திலேயே மாணவரிடையே தாளப் பிடிப்பை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

01. ஆரம்பத்தில் மாணவருக்குத் தாளத்திற்கேற்ப அசைவதற்குரிய பயிற்சிகளைக் கொடுத்தல் வேண்டும்.மாணவரை வரிசையாக நிற்க வைத்து அல்லது வட்டமாக நிற்கவைத்து கை, கால்களை உடம்பைத் தாளத்திற்கேற்ப அசைய வைத்தல், துள்ள விடுதல், ஓட விடுதல், போன்றவற்றைச் செய்யலாம்.

02. தாள நடைகளை மாற்றி மாற்றி அசையப் பயிற்சி கொடுத்தல், பஞ்ச நடைகளைப் பயன்படுத்தி இவற்றை மேற்கொள்ளலாம். சதுஸ்ர நடையில் காலை மடித்து நடக்கவிடல், பின்பு திஸ்ர நடையில் நடக்க விடல், பின்பு நடைகளை மாற்றித் துள்ள விடல், கழுத்தசைக்கவிடல் போன்றன இலகுவாக மாணவரிடையே தாளப் பிடிப்பை ஏற்படுத்தும்.

03. சிறிய சிறிய அபிநயப் பாடல்கள் மூலம் மாணவர்களிடையே தாளத்தை ஏற்படுத்தலாம். இதை மாணவர்கள் மிகவும் ஆர்வமாகவும் ஆசையாகவும் செய்வார்கள். சதுஸ்ர நடையில் அமைந்த பாடல்கள் கிராமியப் பாடலுக்கு அபிநயம் சொல்லிக் கொடுப்பதன் மூலம் தாளப் பிடிப்பை ஏற்படுத்தலாம்.

04. அடவுகளில் நன்றாகப் பயிற்சி பெற்ற மாணவருக்கு அடவுகளை நடை மாற்றி பயிற்சி கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுப்பதன் மூலம் இலகுவாக தாளப் பிடிப்பை ஏற்படுத்தலாம்.

05. பஞ்ச நடைகளில் அமைந்த திருப்புகழ்கள் நிறைய உண்டு. இவற்றை மாணவருக்குத் தாளத்துடன் பாடப்பழக்கிப் பின் இவற்றிற்கு அபிநயம் செய்யும் பொழுது மாணவரிடம் நிச்சயம் தாளப்பிடிப்பு ஏற்படும். இதை ஓரளவு தேர்ச்சி பெற்ற மாணவருக்கு மேற்கொள்ளலாம்.

06. எந்தப் பாடலுக்கான அபிநயத்தைச் சொல்லிக் கொடுக்க முன்னரும் அதனை மாணவருக்குக் கையில் தாளம் போட்டுப் பாட வைக்க வேண்டும். ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு அடவுகள் உருப்படிகளை கையில் தாளம் போட்டு சொற்கட்டுக்களைச் சொல்ல வைக்க வேண்டும். அப்போது நிச்சயமாகப் பிள்ளை தாளப் பிடிப்புடன் ஆடப் பழகிவிடும்.

07. தாளத்தின் வேகத்தையும் படிப்படியாகக் கூட்டி பயிற்சி கொடுக்க வேண்டும். 1ம் காலம், 2ம் காலம், 3ம் காலம், 3ம் காலம், 2ம் காலம், 1ம் காலம் எனப் பயிற்சி கொடுக்க வேண்டும். இவ்வாறு அடிக்கடி பயிற்சி கொடுத்து வந்தால் தாளப்பிடிப்பு ஏற்படும். இவ்வாறான செய்கை முறைகளை ஏற்படுத்துவதன் மூலம் பயிற்சி கொடுத்து மாணவரிடையே தாளப் பிடிப்பை ஏற்படுத்தலாம்.



# ஒரு நாட்டிய நாடகத்தினைத் தெரிவு செய்யும் போது கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள்

01. நாட்டிய நாடகத்திற்கான தலைப்பு
02. கருப்பொருள்
03. கதையம்சத்துடன் பாடல்கள்
04. பாடலுக்கான இசையமைப்பு
05. காலம் (குறித்த நேரம்)
06. பாத்திரங்களின் எண்ணிக்கை
07. பாத்திரங்களின் தெரிவு
08. நாட்டிய நாடகத்தைப் பயிற்றுவித்தல்
09. குறித்த நேரப் பயிற்சி
10. ஒத்திகை பார்த்தல்
11. மேடை அலங்காரம்
12. நாட்டிய நாடகத்தை மேடையேற்றல்

### தலைப்பு

நாட்டிய நாடகம் ஒன்றிற்கான தலைப்பைத் தேர்ந்தெடுக்கும் போது அந்தத் தலைப்பிற்குரிய கதையம்சங்கள் எளிதில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு கிடைக்காவிடின் அத்தலைப்பினைத் தேடுவதற்குக் காலம் போய்விடும்.

### கருப்பொருள்

நாட்டிய நாடகத் தலைப்பிற்கேற்ப கருப்பொருளை உள்வாங்கி அதை நாட்டிய நாடகமாக்கி வெளியிடுவதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது. கருப்பொருளை வெளிப்படுத்துவதற்கு கதையம்சம், பாத்திரம், இசையமைப்பு, மேடையமைப்பு என்பன மிக முக்கியமானதாகும். இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து வெளிப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படும். மேற் கூறப்பட்ட விடயங்களில் ஏதாவது ஒரு விடயம் குறையுமாயின் நாட்டிய நாடகத்தின் தன்மை வீழ்ச்சி அடையும்.

### கதையம்சம்

தலைப்பிற்கும் கருப்பொருளுக்கும் ஏற்ப நாட்டிய நாடகப் பாணி முறையில் கதையினை எழுதுவதற்கு நடன ஆசிரியர்கள், புலவர்கள் அல்லது இத்துறையில் பாண்டித்தியம் பெற்றவர்களை நாடவேண்டி இருக்கும்.

இச்சந்தர்ப்பத்தில் அவர்களின் ஒத்துழைப்பு இல்லாவிடின் கருப்பொருளிற்கேற்ப கதையம்சம் கதையினை எழுதும் போது தமிழ் நடைச் சொற்கள், வசனங்கள் குறைவு படாது, உவமான உவமேயங்கள் கவனிக்கப்படவேண்டும். இவற்றைக் கவனித்து நடப்பதாயின் நல்ல தமிழ் கற்ற அறிஞராலேயே எழுது முடியும். அவர்கள் எழுதித்தர நீண்டகாலம் எடுக்குமாயின் பழக்கி மேடையேற்ற ஆசிரியருக்குச் சிரமம் ஏற்படும்.

### இசையமைப்பு

கதையம்சம் எழுதி முடிந்தவுடன் அந்தந்த பாத்திரப் பாணிக்குரிய இசையமைப்பு அவற்றின் தாள நடைகளைக் கவனித்துப் பாத்திரத்தைத் தெரிந்து பழக்க இலகுவாக இருக்கும். பொருத்தமான இசையமைப்பு என்பது அதில் கவனிக்கப்படும். அதில் வரும் ரசங்களைக் கவனித்து அதற்கேற்ற வகையில் ராகங்களைத் தெரிந்து அமைத்தல் வேண்டும். இதற்கு நடன ஆசிரியர் இசையாசிரியரை நாட வேண்டும். இசையாசிரியருக்கு அந்த ராகங்களின் தன்மைக்கேற்ப சொற்கள் முறிவடையாது. இசையமைக்க வேண்டும். இதில் கால தாமதம் ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் நாட்டிய ஆசிரியருக்குப் பாரிய சிக்கல் ஏற்படும்.

### குறித்த நேரம்

எவ்வளவு நேரத்திற்குள் இந்நாட்டிய நாடகம் தொடங்கி முடியும் என ஆசிரியர் நேரத்தைத் தயார்ப்படுத்த வேண்டும். அந்நேரத்திற்கமைய பழக்குதல் வேண்டும்.

### பாத்திரங்களின் எண்ணிக்கையும் பாத்திரங்களின் தெரிவும்

நாட்டிய நாடகங்களுக்குப் பொருத்தமான பாத்திரங்களைக் கவனித்துத் தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும். அந்தப் பாத்திரங்களுக்குரிய தெரிவுகளை மேற்கொள்ளும் போது பல இடர்களைச் சந்திக்க நேரிடும். சில வேளைகளில் பொருத்தமான பாத்திரம் கிடைக்காமலும் விடலாம். இவ்வாறான நிலையில் எப்படியாயினும் அந்தப் பாத்திரத்தை உருவாக்க வேண்டியது ஆசிரியரைப் பொறுத்தது.

உதாரணம்:-

இராவணன் பாத்திரத்திற்குக் கிட்டத்தட்ட இராவணனின் உடற்பருமன், அந்தப் பாத்திரத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் உள்ளதா எனக் கவனித்துத் தெரிதல் வேண்டும். அவ்வாறில்லையாயின் நாட்டிய நாடகம் தோல்வியடையும்.

### பயிற்றுவித்தலும் குறித்த நேரமும்

பாத்திரங்களைத் தெரிவு செய்து பழக்கும் போது ஆசிரியருக்கு இருக்கும் பாரிய பிரச்சனை, ஒவ்வொரு மாணவரும் குறித்த நேரத்திற்கு வராவிடின் சீராகப் பழக்க முடியாது. இதனால்

ஆசிரியர் பாரிய பிரச்சினையை எதிர் நோக்குவார். எல்லாப் பாத்திரங்களையும் சேர்த்துப் பழக்குதல் பாரிய பிரச்சினை ஆகும். இதற்காக கட்டுப்பாட்டு விதி முறைகள் விதிக்கப்படவேண்டும்.

ஒத்திகை

நாட்டிய நாடகத்தைப் பயிற்றுவித்த பின்னர் சகல இசைக் கலைஞ ர்களுடன் ஒத்திகை பார்த்தல் நிகழ்வு இடம்பெறும். இந்நிலையில் எல்லாக் கலைஞர்களையும் ஒன்று சேர்ப்பது சிரமமமாகும். அத்தோடு இசைக் கலைஞரும் வாத்தியக் கலைஞரும் தம் இசையோடு கருத்தையும் காட்சிக்கேற்ற பாடலின் அசைவுகளையும் உணர்ந்து இசையினை வெளிப்படுத்த வேண்டும். சில சமயத்தில் சில காட்சிகளை பல நேரம் பார்க்க வேண்டும். அந்நேரத்தில் பொறுமை, சகிப்பு மாணவரிடமும் ஆசிரியரிடமும் இருக்க வேண்டும்.

## ஒப்பனை

ஒப்பனை என்பது மிகவும் முக்கியமானதாகும் பாத்திர்ங்களுக்கேற்றபடி உடை அலங்காரம் ஆபரண அலங்காரம், தலை அலங்காரங்கள் அமையவேண்டும் இவற்றிகு நிறைய நிதி தேவைப்படும் . உரிய ஒப்பனை அமைந்தாலே நாட்டிய நாடகம் வெற்றிபெறும்.

மேடை அலங்காரம்

நாட்டியத்திற்குரிய காட்சிகளை அரங்கத்திற்குக் கொண்டு செல்கையில் அலங்காரங்களை அரங்க அமைப்பிற்கு ஏற்ப செய்ய வேண்டும். அத்தோடு ஒலி, ஒளி, அமைப்புக்களையும் கவனித்தல் அவசியமாகும். இவற்றைக் கொண்டு குறித்த நேரத்தில் நாட்டிய நாடகம் முடிவடைகின்றதா எனப் பார்த்தல் வேண்டும்.

அரங்கேற்றம்

ஒரு நல்ல நாள் பார்த்து குறித்த நேரத்தில் குறித்த நாட்டிய நாடகத்தை மேடை ஏற்றல் வேண்டும். இதற்கு அச்சாணியாக நடன ஆசிரியர் தொழிற்படுவார். ஒவ்வொரு பாத்திரங்களும் தமது காட்சியை புலப்படுத்துகின்றன. இசை வாத்தியக் கலைஞர் உதவி புரிதல் ஒப்பனை முறை குறித்த நேரத்தில் முடிவடைதல் என்பன நாட்டிய நாடக வெற்றிக்குத் துணை புரிகின்றன.

# பரத நாட்டியத்திற்கும் கூத்திற்கும் உள்ள வேற்றுமை

கூத்தில் ஆடலும் பாடலும் தாளமும் முக்கியம். இதே போன்று பரதத்திலும் ஆடலும் பாடலும் தாளமும் முக்கியம். கூத்தில் இடம் பெறும் ஒவ்வொரு ஆட்டமும் குறியீட்டில் செய்யப்படும். உதாரணமாக வேட்டை ஆடுதல், ராஜா ராணி வருதல் கால மேற்றுதல் அனைத்தும் குறிப்பிட்ட தாளக்கட்டின் ஒலியைக் கேட்டலும் நடைபெறும். இதேபோல பரதநாட்டியத்தில் குறியீட்டின் அடிப்படையில் ஜதிக்கோர்வைகள் அபிநயங்கள் இடம்பெறும். பரத நாட்டியத்தில் குரு, தெய்வம் சபைக்கு வணக்கம் செலுத்துதல் புஸ்ப்பாஞ்சலியுடன் அலாரிப்பு நடைபெறும். இதில் சிரோபேதம் கிரிவாபேதம் என்பன முக்கிய இடம் பெறும். இது ஓர்தூய நிருத்த உருப்படி ஆகும், இதே கூத்தின் பாத்திரங்களை வரவு விருத்தத்தினை ஒப்பிடலாம், கூத்தில் வரும் தலை அசைவு கண் அசைவு, அலாரிப்பில் வரும் சிரோ, திருஸ்டிபேதத்தினை ஒப்பிடலாம்.

ஜதியும் ஸ்வரமும் சேர்ந்து வருவது ஜதிஸ்வரம் ஆகும். நன்குகோர்க்கப்பட்ட ஸ்வர வரிசைகளுக்கு கோர்வை அமைத்து இடப்படும் ஜதிஸ்வரத்தில் கோர்வை சேர்வதனால் அலாரிப்பை விட அது பொலிவு பெறும். இதே போல் கூத்தில் பார்த்தில் வரும் தாளக்கட்டு ஆட்டமுறையினை ஜதிஸ்வரத்திற்கு ஒப்பிடலாம்.

சொற்களுக்கும் ஜதிகளுக்கும் இணைந்து வருகின்ற திருத்த உருப்படி யாவும் ஜதிஸ்வரத்தில் அமைந்துள்ளது.

சப்தம் என்பது ஆடலையும் அபிநயத்தையும் பாவத்தையும் வெளிப்படுத்துவதாகும். இது நிருத்திய உருப்படி ஆகும். சப்தத்தில் தொடர்ந்து வரும் வர்ணம். இது ஜதிகளும் சாகித்தியங்களும் கலந்து வரும் உருப்படி ஆகும். இதே போல கூத்தில் சப்தத்திற்கும் வர்ணத்திற்கும் ஒப்பாக

வரவுத் தருவில் ஜதி பாடல் என்பன இடம் பெறும்.

பரதத்தில் பதம் கீர்த்தனை போல கூத்திலே தர்க்கதரு தனி மொழிப் பாடல்கள் என்பன இடம் பெறுகின்றன. தனிமொழிப் பாடல்கள் பதத்தில் தர்க்கதரு கிர்த்தனைக்கும் ஒப்பாகும். பதத்திலும் கிர்த்தனையிலும் நாடக அம்சங்கள் நிறைந்துள்ளன இதே போல் கூத்திலும் தர்க்கதரு தனிமொழிப் பாடல்களில் நாடக அம்சங்கள் நிறைந்துள்ளது. பரத நாட்டியத்திலே கச்சேரியில் இறுதியாக தில்லானா இடம்பெறும். இதுவிறு விறுப்பாக அமைந்திருக்கும். திம், திம் தின திரண தொம் என்ற செற்றொடருக்கு ராகம் அமைத்து வரும். இதே போல் கூத்தின் இறுதியில் பாத்திரம் மேடையை விட்டுச் செல்ல முன்பு தாளம் ஏற்றுதல் என்றும் ஓர் நிகழ்வு இடம் பெறும். தில்லானா இதற்கு ஒப்பாகும்.

பரத நாட்டியத்தின் இறுதியில் சுலோகம் அல்லது மங்களம் இடம் பெறும். இதே போல் கூத்தில் வழிபடுதல் அல்லது தொட்டுக் கும்பிடுதல் இடம் பெறும். பரத நாட்டியத்தில் ஆரம்ப அடவுகளை தட்டடவு நாட்டடவு போல கூத்தில் அண்ணாவியார் அடிப்படை ஜதிகளுக்கு கால் போடும் பயிற்சி கொடுக்கப்படும்.

# கிராமிய நடனத்திற்கும் சாஸ்திரிய நடனத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

கிராமிய நடனங்கள் கிராமத்து மக்களின் உணர்வுகளை கண்ணாடி போல வெளிப்படையாக காட்டும் தன்மையுள்ளவை. ஆனால் சாஸ்திரிய நடனங்கள் ஒரு கட்டுக் கோப்பான வரம்பு முறைக்கு உட்பட்டு ஆடப்படுபவையாகும். கிராமிய நடனமானது இது இவ்வாறு இப்படிதான் ஆடப்பட வேண்டும் என்று இல்லை. ஒரு கிராமத்து மக்களின் கலாசார பண்பாட்டுக்கு ஏற்ப அமைந்திருக்கும். இது கிராமத்துக்கு கிராமம் வேறுபடும். ஆனால் சாஸ்திரிய நடனமானது ஓரேவிதமாகவே காணப்படும். எங்கு சென்றாலும் இடம்பெறும். உதாரணமாக பரத நாட்டியத்தை எடுத்துக்கொண்டால் கச்சேரிமுறை அப்பியாச முறை அனைத்தும் எல்லா இடங்களிலும் ஒரே வித கட்டுக் கோப்புடனேயே ஆடப்படும்.

கிராமிய நடனத்தில் இவ்வாறு இடம்பெறுவதற்கு சாத்திய கூறு குறைவாகவே காணப்படும். சாஸ்திரிய முறையாக காணப்படும் சாஸ்திரிய நடனங்களில் பரத நாட்டியம், குச்சுப்படி ஒடிசி, மணிப்புரி, கதக், கதக்ளி, மோகினி ஆட்டம் என வகுத்துள்ளார்கள் ஆனால் கிராமிய நடனங்களில் ஆடப்படும் சந்தர்ப்பத்திற்கேற்ப 3 வகையாக பிரிக்கப்படுகிறது.

1. பக்தி நிமித்தம்
2. தொழில் நிமித்தம்
3. கேளிக்கை நிமித்தம்.

தமக்கு நோய் துன்பம் ஏற்பட்ட போது மக்கள் தமது குல தெயவமான கடவுளை வேண்டி ஆடப்படும் நடனம் கரகம், காவடி, வேப்பிலை உருவேறிய நடனம் ஆகும். மகிழ்ச்சியாகவும் தமது குடும்பங்களில் அல்லது உறவுகளின் திருமண வைபவங்கள். பூப்புனித நிராட்டு விழா போன்ற நிகழ்வுகளின் நிமித்தம் கும்மி, கோலாட்டம், ஆடப்படும். கிராமப் புறங்களில் வேலை செய்யும் போது கஷ்டமும் களைப்பும் நீங்க வேலை செய்பவர்கள் பாடி ஆடுவார்கள். அதன் நிமித்தம் உருவாக்கப்பட்டவையே உழவர் நடனம், மீனவ நடனம் போன்றவற்றை குறிப்பிடலாம் சாஸ்திரிய நடனங்கள் இந்தியாவில் ஒவ்வொரு பிரதேசத்திற்குமுரிய தேசிய நடனமாக ஆடப்படுகிறது. பரத நாட்டியம் தென் இந்தியாவிலும் குச்சுப்படி ஆந்திராவிலும் ஓடிசி ஒரிசா மானிலத்திலும், மணிப்புரி மணிப்புரியிலும் கதக் வட இந்தியாவிலும் கதகளி கேரளாவிலும் விளங்குகிறது. இலங்கையின் தேசிய நடனமாக கண்டிய நடனம் விளங்குகிறது.

ஒவ்வொரு சாஸ்திரிய நடனங்களையும் அக்காலங்களில் இருந்த அத்துறை சார்ந்த அறிஞர்களும் ஆட வல்லோர்களும் அழிய விடாது பாதுகாத்து வந்துள்ளார்கள் பரத நாட்டியத்தை தஞ்சை நால்வர் மூலம் ஏனையவற்றை அக்காலத்தில் உள்ள கலை விற்பன்னர்கள் பாதுகாத்தனர் கிராமிய நடனங்களின் தோற்றம் எதுவென்று கூறமுடியாது. காரணம் ஆதி மனிதனின் முதல் மொழியே அசைவு ஆகும். தமது உணர்வு அனுபவங்களுக்கு ஏற்ப அசைவை பயன்படுத்தியுள்ளனர். அதுவே பாமர கலையாகும். அதுவே பரதம் தோன்ற அத்திவாரமாக அமைந்திருக்கலாம்.

பரதநாட்டியம் அதை கற்றவர்களுக்கும் கலை விற்பன்னர்களுக்குமே விளங்கக் கூடியது. அதில் வரும் முத்திரை சிரோ, திருஷ்டி பேதங்களை கற்றவர்களாலேயே விளங்கிக் கொள்ள முடியும் பாமர மக்களால் விளங்கிக் கொள்ள முடியாது ஆனால் கிராமிய நடனத்தை எல்லோருமே விளங்கிக் கொள்ள முடியும். அதனை பார்த்து சுவைத்துக் கொள்ள முடியும். கிராமிய நடனங்களிலும் கண் அசைவு கழுத்தசைவு முத்திரை பயன்படுத்தினாலும் இவை அனைத்தும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் குறியீடாகவே காணப்படும்


ஒவ்வொரு சாஸ்திரிய நடனங்களும் கச்சேரி அமைப்பு முறையை கொண்டுள்ளன. ஆனால் கிராமிய நடனங்கள் அவ்வாறான அமைப்பு முறை எதையும் கொண்டிருக்கவில்லை. தமது ஊர் வழக்கப்படி ஆடல் முறையை அமைத்துக்கொள்வர். சாஸ்திரிய நடனங்களுக்கென பக்கவாத்தியம் வரையறை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக பரத நாட்டியத்தில் வயலின், வீணை மிருதங்கம், நட்டுவாங்கம் போன்ற வாத்தியங்கள் பயன்படுகின்றன, ஆனால் கிராமிய நடனங்களில் உடுக்கு, பறை, சேமக்கலம், சங்கு, தபேலா போன்ற வாத்தியம் பயன்படுத்தப்படும்.

சாஸ்திரிய நடனத்திற்கு என உடை, ஒப்பனை முறைகள் அனைத்தும் மரபு ரீதியாக வழங்கப்பட்டுள்ளது. பரத நாட்டிய கச்சேரி அமைப்பு முறைக்கு பஞ்ச கச்சம் என்ற உடை அமைப்பு காணப்படுகின்றது. கிராமிய நடனங்களில் ஆண்கள் பெரும்பாலும் வேட்டி சட்டையை கொடுக்காக கட்டுவதும் பெண்கள் பாவாடை தாவணி அணிவதும் மரபாகும். அத்தோடு தமது ஊர் வழக்கத்துக்குரிய சம்பிரதாயப்படி ஆடை ஆபரணங்களையும் அணிந்து கொள்வர். சாஸ்திரிய நடனங்களை பல ஆண்டுகள் முறையாக கற்று வரவேண்டும். பலவிதமான அப்பியாச பயிற்சிகளையும் செய்ய வேண்டும். ஆனால் கிராமிய நடனங்ளை பார்த்த மாத்திரத்தில் எளிதில் விளங்கிக் கொண்டு ஆடலாம். கிராமிய இசையும் கிராமிய நடனமும் கேட்ட பார்த்த அளவில் மனதை லயிக்கக் கூடியவை.


# அஸம்யுத ஹஸ்தங்கள்


(ஒற்றைக்கை முத்திரைகள்)

1. பதாகஸ், 2. த்ரிபதாகோ, 3. அர்தபதாகஹ், 4. கர்தரீமுகஹ
5. மயூராக்யோ, 6. அர்தசந்த்ரஸ்ச, 7. அராளஹ், 8. சுகதுண்டகஹ
9. முஷ்டிஸ்ச, 10.சிகராக்யஸ்ச, 11. கபித்தஹ், 12. கடகாமுகஹ
13. ஸ^ சீ 14.சந்த்ரகலா, 15. பத்மகோஷஹ, 16. ஸர்பசிரஸ்ததா
17. மருகசீர்ஷ, 18. ஸிம்ஹமுகஹ, 19. காங்குலஸ்ச, 20. அலபத்மகஹ
21. சதுரோ, 22. பரமரஸ்சைவ, 23. ஹம்ஸாஸ்யோ, 24. ஹம்ஸபக்ஷகஹ
25. ஸந்தம்சோ, 26. முகுளஸ்சைவ, 27. தாம்ரசூடஸ், 28. த்ரிசூலகஹ


01



02


03



04



05


06



07


08


09


10



11



(1) (2) (3)

12



13



14



15



16


17


18



19



20


21



22


23


24


25


26



27


28

# ஸம்யுத ஹஸ்தங்கள்

(இரட்டைக்கை முத்திரைகள்)


1. அஞ்ஜலிஸ்ச, 2. கபோதஸ்தச 3. கர்கடஸ், 4. ஸ்வஸ்திகஸ்ததா
5. டோலாஹஸ்த, 6. புஷ்பபுடஹ, 7. உத்ஸங்க, 8. சிவலிங்ககஹ
9. கடகாவர்தனஸ்சைவ 10. கர்தரீ, 11. ஸ்வஸ்திகஸ்ததா
12. சகடம், 13. சங்க, 14. சக்ரேச, 15 ஸம்புட, 16. பாஷ, 17. கீலகெள
18. மத்ஸ்ய 19. கூர்மோ, 20. வ்ராஹஸ்ச, 21. கருடோ, 22. நாகபந்தகஹ
23. கட்வோ, 24. பேருண்ட காக்யஸ்ச, அவஹித்தஸ், ததைவச


01



02



03



04



05


06


07


08


09


10


11


12




13



14



15



16



17



18




19




20



21



22



23



24

வ/நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி நடாத்தும்

## நிருத்திய சங்கமக் கலைவிழா

தலைமை :- தமிழ்மணி அகளங்கன் அவர்கள்

இடம் :- வவுனியா நகரசபை புதிய கலாசார மண்டபம்

காலம் :- 20.09.2009 ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- பிற்பகல் 2.30மணி

**பிரதம விருந்தினர்**

மாண்புமிகு ஜெ. விஸ்வநாதன் அவர்கள்

(மேல்நீதிமன்ற நீதிபதி – வவுனியா)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு. எஸ். என். ஜீ. நாதன் அவர்கள்

(நகரபிதா)

திரு. ஜீ. ரீ. லிங்கநாதன் அவர்கள்

(முன்னாள் நகரபிதா)

**கௌரவ விருந்தினர்கள்**

திரு. க. பேனாட் அவர்கள்

(பீடாதிபதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி)

திரு. சி. உலகநாதன் அவர்கள்

(அதிபர் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்)

திருமதி. சி. கவிந்தன் அவர்கள் M.F.A. Dance

(கலைக்காவேரி நுண்கலைக் கல்லூரி இணைப்பாளர் இலங்கை)

அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம்.

நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

## தீபாவளிப் பரதக்கலை விழாவும் சான்றிதழ் வழங்கலும் - 1995

இடம்: நகரசபை மண்டபம் - வவுனியா.

காலம்: **21 - 10 - 95** சனிக்கிழமை பி. ப. **5 - 00** மணி

தலைவர்: தமிழ்மணி அகளங்கன் அவர்கள்
( தலைவர், பிரதேச கலாசாரப் பேரவை, வவுனியா.)

பிரதம விருந்தினர்கள்: உயர்திரு. வை. பாலச்சந்திரன் அவர்கள்
( பாராளுமன்ற உறுப்பினர் - வன்னி )
உயர்திரு. க. கணேஷ் அவர்கள்
( மாவட்டச் செயலாளரும், அரச அதிபரும் - வவுனியா.)
உயர்திரு. துரைதியாகராசா அவர்கள்
( மாவட்டக் கல்விப் பணிப்பாளர் - வவுனியா )

கௌரவ விருந்தினர்கள்: உயர்திரு. நா. லிங்கநாதன் அவர்கள்
( நகரபிதா - வவுனியா. )
திருமதி. இமெல்டா அற்புதராசா அவர்கள்
( பிரதேச செயலாளர் - வவுனியா. )

**நிகழ்ச்சிகள்**

பி. ப. 5 - 00 விருந்தினர் வருகை
5 - 05 மங்கல விளக்கேற்றல்
5 - 10 நடராஜர் அஞ்சலியும், பெயர்சூட்டு விழாவும்
5 - 15 தமிழ்த்தாய் வணக்கம்
5 - 20 வரவேற்புரை: திரு. சொ. அருந்தவநாயகம்
5 - 30 தலைமையுரை
5 - 40 பிரதம விருந்தினர்கள் ஆசியுரை
5 - 55 வட - இலங்கை சங்கீத வித்வ சபையினால் நடந்த வருடம் நடாத்தப்பட்ட நடனப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

மாலை 6 - 00 கலை நிகழ்ச்சிகள்
(1) பரத நாட்டியம்: நடன ஆசிரியை செல்வி சு. சூரியயாழினி அவர்களின் மாணவ-மாணவிகள்
(2) இசை: சங்கீத ஆசிரியை திருமதி வசந்தி கண்ணன் அவர்களின் மாணவிகள்
(3) மிருதங்கம்: மிருதங்க வித்துவான் திரு. க. கனகேஸ்வரன் அவர்களின் மாணவர்கள்
(4) வயலின் இசை: வயலின் ஆசிரியை திருமதி. விமலலோஜினி கனகேஸ்வரன் அவர்களின் மாணவிகள்

நன்றியுரை: நடன ஆசிரியை செல்வி சு. சூரியயாழினி அவர்கள்

நடன ஆசிரியை செல்வி சூரியயாழினி குலசூரியர் அவர்களின் நாட்டியக் கலாலயத் திற்கு பெயர் சூட்டுதலும், மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் முகமாகவும் நடை பெறுகின்ற இக் கலைவிழாவிற்கு வருகை தருமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாட்டியக் கலாலயம்,
வவுனியா.

பெற்றோர், ஆசிரியர்,
மாணவர்கள்.

கலைமகள் - வவுனியா




வவுனியா

## நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி

வழங்கும்

# பௌர்ணமி விழா

| | |
|---|---|
| இடம் :- | சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம் |
| காலம் :- | 03-03-2007 |
| நேரம் :- | காலை 10 மணி |
| தலைமை | செல்வன் அ. சுயேந்திரா அவர்கள் |

பிரதம விருந்தினர்

**திரு. P. கோபிகிருஸ்ணா அவர்கள்**

(ஹற்றன் நஷனல் வங்கி வவுனியா கிளை முகாமையாளர்)

சிறப்பு விருந்தினர்

**திருமதி. இ. சண்முகலிங்கம் அவர்கள்**

(அழகியல்துறை உதவிக்கல்விப் பணிப்பாளர் வடக்கு வலயம்)

கௌரவ விருந்தினர்

மக்கள்சேவை மணி

**நா. சேனாதிராசா அவர்கள்**

(சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர்)

அனைவரையும் வருகவருகவென்று வரவேற்கின்றோம்
நிருத்ய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களது
கலைநிகழ்வுகள் ஆக்கங்கள் இடம் பெறுகின்றன.

இங்ஙனம்
நிருத்ய நிகேதன நுண்கலைக் கல்லூரி
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,
நிர்வாகசபை உறுப்பினர்கள்

வவுனியா நிருத்ய நிகேதன நுண்கலைக் கல்லூரி
பூங்காவீதி - வவுனியா.




வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற மூன்று நாள் நாட்டிய விழாவில் நடன ஆசிரியை ஸ்ரீமதி சூரியயாழினி வீரசிங்கத்தின் நெறியாழ்கையில் அவரது திருத்திய நிகேதன மாணவிகள் வழங்கிய பாம்பு நடன தோற்றங்களை படங்களில் காணலாம்.

(படம்:

எஸ்.எம். சுரேந்திரன்)



நித்திய நிகேதனம் நுண்கலை கல்லூரி ஆசிரியர் திருமதி சூரிய கலா வீரசிங்கம் தயாரிப்பில் வடக்கின் இன ஒற்றுமை மூலம் கல்வி, கலைகள், விவசாயம், மீன்பிடி, ஆகியவற்றை பிரதிபலிக்கும் தமிழ் சிங்கள , முஸ்லிம் மாணவர்களின் கிராமிய நடனங்களில் சில காட்சிகள். அண்மையில் B.M.I.C.H. இல் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

(படப்பிடிப்பு:- எம்.எம். சுரேந்திரன்)

# ලක්බිම

http://www.lakbima.lk

279 වන පත්‍රය | ශ්‍රී.බු.ව. 2553 ක්වූ නවම් පුර 07 වන තිථිය ලත් සිකු දින | 2010 ජනවාරි 22 සිකුරාදා



## උතුරු වසන්තය කොළඹදී

උතුරේ දෙමළ ජනතාවගේ සංස්කෘතිකාංග කලඑළිදැක්වූ උතුරු වසන්තය සංස්කෘතික ප්‍රසංගය ජනාධිපති මහින්ද රාජපක්ෂ මහතාගේ ප්‍රධානත්වයෙන් සිරිමාවෝ බණ්ඩාරනායක අනුස්මරණ ශාලාවේදී පෙරේදා (20) පස්වරුවේ අති උත්කර්ෂවත් අන්දමින් පැවැත්විණි. උතුරු පළාතේ දෙමළ දූවා දරුවන් සහ නර්තන සහ ගායන ශිල්පීන් විශාල පිරිසක් මෙම ප්‍රසංගයේදී විවිධ කලා කෘතීන් ඉදිරිපත් කළහ. එහිදී නර්තන කණ්ඩායමක් සිය අනන්‍යතාව විදහා දක්වන අලංකාර නර්තනයක නිරතවන අයුරු සහ ජනාධිපති මහින්ද රාජපක්ෂ මහතා සහ උතුරු පළාත් ආණ්ඩුකාර ජී.ඒ. චන්ද්‍රසිරි මහතා ඇතුළු සම්භාවනීය අමුත්තන් එදෙස බලා සිටින අයුරු.

□ ඡායාරූපය - ඉන්දික හේවාවිතාරණ

# Five artists honoured with Bunka awards



Students of Suriya Weerasingam at the awards ceremony



Northiro playing the Koto



Vasantha Kumara Kobawaka (Lyricist) receiving his award



Damayanthi Jayasuriya (music) receiving her avard from the Japanese Ambassador



Ananda Dabare (music) receiving his award



Sarath Kumara Liyanawatta (Music) receiving hisaward



Suriya Yarlini Weerasingam (dancing) receiving her award

The 13th Bunka (Cultural) Awards organised by the Japan Sri Lanka Friendship Cultural Fund was held on November 11 at the Sri Lanka Rupavahini Corporation TV Studio. The Bunka Awards are presented annually by the Japan Sri Lanka Friendship cultural Fund, which was established in 1993 on the initiative of the Japanese Associaion and the Japanese Commerce and Industry Associatn of Sri Lanka, in collaboation with the Embassy of Jaan. For the past twelve years I such awards have been resented to mid-career indiviqals and organisations on te basis of their creative actrties in culture and the arts. order to encourage and proote individual and collective talent in these fields in Sri Lanka.

Y. Watanabe, Co-Chairperson of the Selection Committee of the Japan Sri Lanka Friendship Cultural Fund, Mahinda Yapa Abeywardena, Minister of Cultural Affairs and National Heritage, Kiyoshi Araki, Ambassador of Japan in Sri Lanka and a distinguished gathering of invitees including several Sri Lankan cultural artists were present on this occasion.

Apart from the performances by award winners, the highlight of the ceremony was a special guest performance by renowned Japanese Koto players Ms. Yuko Yokoyama and Norihiro Ishikawa, who entertained the audience with some fabulous music played on the Koto, a traditional Japanese musical instrument.

The programme was sponsored by Sri Lanka Rupavahini Corporation, SriLankan Airlines, Hilton Colombo, Hotel Tree of Life, Kandy and Tyrsofa Lanka (Pvt) Ltd.

*Pix by Nihal Chandrakumar*


VEL MURUGAN JEWELLERS
Dealers in pure 22ct Gold Jewellery
No87A, Kandy Road, Vavuniya.
Tel: 024 22248
SRI YASHO
JEWEL HOUSE
No. 124 , SEA STREET,
COLOMBO. 11
TEL: 011 4896883
UMARAA'S
No.58, Tharmalingam Street,
Vavuniya.
Tel: 024 22655
Textiles
Quality & Fashion Tex
நிருத்திய நிகேதன நுண்கலைக்
கல்லூரியை வாழ்த்துகின்றோம்.
Venukka Tex
DEALERS IN TEXTILES &
FANCY GOODS
No.90. Bazaar Street,
Vavuniya.
T.P: 024 2225163
SMS
SALEEMA'S
145, Bazaar Street,
Vavuniya.
Sanshiqaa
Jewel House
Bazaar Street,
Vavuniya

MAUREEN

Dealers in: Imitation Jewellery, Fancy Good, Gift Items, Bags Items, School Items, Toys, Etc.

No.180, Bazaar Street, Vavuniya.

ANANTHANS
Joot ware

No.137, Bazar Street, Tharmalingam Veethi, Vavuniya.
Tel: 024 2221171

B.A COLLEGE
தரமான கல்விக்கு வழமான கல்வி நிலையத்தை நாடுங்கள்
மகாறம்பைக்குளம்
வவுனியா.





நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியை வாழ்த்துகின்றோம்.

Kalyani
Textile

No.69, Bazaar Street, Vavuniya.

லேனா சில்க்
தெரிவுகள் ஏராளம்
149, பஸார் வீதி,
வவுனியா.

ARUN
Super Market
H.P Road, Rambaikulam, Vavuniya.



ஹற்றன் நஷனல் வங்கி லீசிங்
நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியை வாழ்த்துகின்றோம்.
❖ உங்கள் மனதிற்கு உங்கள் வாகனத்தை
❖ குறுகிய காலத்தில்
❖ குறைந்த தவணைக்கட்டனத்தில்
❖ 60 மாத கொடுப்பனவு காலம் வரை
❖ சினேகபூர்வ சேவையுடன்
❖ பெற்றுக்கொள்ள
இன்றே உங்கள் வவுனியா ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையை நாடுங்கள்




BOC infinity
Retirement Plan
SUSTAINYOURLIFESTYLE
BOC Infinity
Retirement Plan
Planing for a Successful retirement Starts here - no matter where you are. Bank of Ceylon now offers you BOC infinity, a retirement plan to save little by little to make your life secure and Comfortable.
நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியை வாழ்த்துகின்றோம்.




NSB
தேசிய சேமிப்பு வங்கி
தேசிய சேமிப்பு வங்கி MasterCard உடன் இணைந்து அறிமுகப்படுத்தும்
Shopping CARD
பணத்தை விட பெறுமதி மிக்கது
கைக்கு அடக்கமான, சிறிதான NSB ஷொப்பிங் கார்ட் இருக்கும் போது ஏன் அதிக பணத்தை வீணே காவிச் செல்ல வேண்டும் ?
துரித அடகு சேவைக்கும் நாடவேண்டிய இடம்
சுதந்திரம்
நம்பிக்கை
பெறுமதி
எளிதான பயனம்
பணம் போதாமல் அல்லாடத் தேவையில்லை
பாதுகாப்பான பயணம்
களவு போகுமென்ற அச்சமில்லை
ஆனந்தமான பயணம்
உங்கள் சேமிப்புக் கணக்கிலிருந்து 24 மணி நேரமும் உடனடிப் பணம் பெறலாம்.
நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியை வாழ்த்துகின்றோம்.





வாணி கணினிப் பதிப்பகம் - வவுனியா தொ.பே: 024 2223658